# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 4 வியாழக்கிழமை (20-09-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:298


### போலியோ தடுப்பு மருந்து வழங்குவதற்காக

# நாளையும் மறுதினமும் புலிகள் யுத்தநிறுத்தம்!

### மீண்டும் அடுத்தமாதம் 19, 20இலும் அமைதி பேணுவர்

லண்டன்,செப்.20

வடக்கு - கிழக்கில் போலியோத் தடுப்பு சொட்டுமருந்து முதலாம் கட்டமாக நாளை மறுதினம் வழங்கப்படவிருப்பதை ஒட்டி, நாளையும் மறுதினமும் யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் முன்வந்துள்ளனர்.

யுத்தநிறுத்தத்துக்கு இணங்குவது பற்றிய - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் - கடிதம் ஒன்று இன்று காலை 'யுனிசெவ்' நிறுவனத்திடம் கையளிக்கப்படும் என விடுதலைப் புலிகளின் லண்டன் வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன.

யுனிசெவ்வின் கோரிக்கைக்கு இணங்க -

போலியோ தடுப்பு மருந்து வழங்கும் நிகழ்வை தடையேதுமின்றி

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஆள்களைக் கடத்தியமைக்காக

# 9 இலங்கையர்களுக்கு ஆஸ்திரேலியாவில் சிறை

சிட்னி,செப்.20

ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக ஆள்களைக் கடத்தி வந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 9 இலங்கையர்களுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் ஒன்று சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் படகு ஒன்றின் மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்ததாகக் கூறப்படும் 24 இலங்கையர்களை ஏற்றிவந்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக விசாரணை நடத்தி வந்த சிட்னி நீதிமன்றம் நேற்று இவர்களுக்கு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

குடியேற்றவாசிகளை ஏற்றி வந்த படகின் தலைமை மாலுமி என்று கூறப்பட்டவருக்கு ஐந்தரை ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ஏனைய 8 பேருக்கும் மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

"மக்களைக் கடத்துவது தீவிர குற்றமாகும் என்ற எச்சரிக்கை இந்தத் தண்டனை மூலம் விடுக்கப்பட்டுள்ளது" - என்று ஆஸ்திரேலிய நீதித்துறை அமைச்சர் கிறிஸ் ரெல்சன் கூறினார்.

சட்டவிரோதக் குடியேற்றவாசி

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தை வலியுறுத்தி கொழும்பில் நேற்று பெரும் மனித சங்கிலிப் போராட்டம்!

## அதை எதிர்த்து சிஹல உறுமய நடத்திய ஊர்வலத்தால் ஆங்காங்கே மோதல்

கொழும்பு,செப்ரெம்பர்20

**சமாதானத்தை வலியுறுத்தி தென்னிலங்கையில் - குறிப்பாகத் தலைநகர் கொழும்பில் - நேற்று நண்பகல் பெரும் மனித சங்கிலிப் போராட்டம் நடைபெற்றது.**

**இந்தப் போராட்டத்தை எதிர்க்கும் விதத்தில் அதேநேரத்தில் சிஹல உறுமய கட்சி நடத்திய ஊர்வலத்தால் கொழும்பில் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெற்றன.**

'ஸ்ரீலங்கா பெஸ்ட்' என்ற பெயருடைய - பல்வேறு வர்த்தக அமைப்புகளின் இணை அமைப்பு - இந்த மனித சங்கிலிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

அமைதித் தீர்வுக்காக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு சகல கட்சித் தலைவர்களையும் கோரும் விதத்தில் நேற்று நண்பகல் 11.55 மணிக்கு அருகில் உள்ள பிரதான வீதிக்கு இறங்கி மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொள்ளும்படி இந்த அமைப்பு சகலரையும் கோரியிருந்தது.

இதன்படி நேற்று நண்பகல் கொழும்பில் ஆங்காங்கே மனித சங்கிலிப் போராட்டம் பெரிய அளவில் நடைபெற்றது. கட்சி ஏற்பாடுகளின்றி பொதுமக்களும், அரச - தனியார் நிறுவனங்களின் ஊழியர்களும் இந்தப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டிலும் நேற்று மனித சங்கிலிப் போராட்டம்

யாழ்ப்பாணம்,செப்.20

'ஸ்ரீலங்கா பெஸ்ட்'அமைப்பு அழைப்பு விடுத்திருந்த மனிதச்சங்கிலிப் போராட்டம் நேற்று யாழ்.குடாநாட்டிலும் பரவலாக நடைபெற்றது.

யாழ்.நகரப் பகுதியிலும் வடமராட்சி, வலிகாமம் மேற்கு புறநகர்ப் பகுதிகள, மானிப்பாய், சங்கானை, கைதடி, கோப்பாய், தீவுப்பகுதிகள், மல்லாகம் ஆகிய இடங்களிலும் ஆங்காங்கே நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பொதுமக்களும் அரச ஊழியர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மனித சங்கிலிப் போராட்டத்துக்கு அஸ்கிரிய பீடாதிபதி கடும் எதிர்ப்பு!

கொழும்பு,செப்.20

சமாதானத்தை வலியுறுத்தி நேற்று நாடு முழுவதிலும் பரவலாக நடத்தப்பட்ட மனித சங்கிலிப் போராட்டத்துக்கு சிங்களத் தீவிரவாத அமைப்புகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் போராட்டம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான செயற்பாடு என்று அஸ்கிரிய பீடாதிபதி விமர்சித்திருப்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்துக்குக் குரல் கொடுப்பது புலிகளுக்கு நன்மையளிக்கும் செயல்

### அது பெரும் குற்றம் என்கின்றது சிஹல உறுமய

கொழும்பு,செப்.20

சர்வதேச ரீதியாகப் பயங்கரவாதத்தைத் தோல்வி காணச் செய்வதற்குத் தற்போது தக்க தருணம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். அதைவிடுத்து விடுதலைப் புலிகளுக்கு நன்மையளிக்கும் விதத்தில் சமாதானத்துக்காகக் குரல் கொடுப்பது குற்றச் செயலாகும்.

- இப்படித் தெரிவித்திருக்கின்றது சிஹல உறுமயக் கட்சி.

நேற்று நண்பகல் சமாதானத்தை வலியுறுத்தி நாட்டின் பல இடங்களிலும் நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டத்தைக் கடுமையாக விமர்சித்துக் கருத்து வெளியிட்டபோதே அக்கட்சி இப்படித் தெரிவித்தது.

இப்போதைய நிலையில் புலிகளுடன் பேசுவது அவசியமில்லை. போரின் மூலம் புலிகளை அழிப்பதன் வாயிலாகவே சமாதானத்தை எட்ட முடியும் - என்றும் அக்கட்சி குறிப்பிட்டது.

நேற்றைய மனித சங்கிலிப் போராட்

(12ஆம் பக்கம் பார்க்க)

### சேகு தாவூத்தை வெளியேற்றும் முயற்சியாக

## அஷ்ரப் தரப்பால் தரப்பட்ட ஆவணங்கள் பொய்யானவை

### உயர்நீதிமன்றம் தெரிவிப்பு

கொழும்பு,செப்.20

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அணியில் தற்போது இருக்கும் பஷீர் சேகு தாவூத் எம்.பியை தேசிய ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் பதவியில் இருந்தும், எம்.பி. பதவியிலிருந்தும் நீக்குவதாக அறிவித்து தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப் விடுத்த உத்தரவு தொடர்பான வழக்கில் -

பேரியல் அஷ்ரப் தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட முக்கிய சில ஆவணங்கள் பொய்யானவை அல்லது செல்லுபடியற்றவை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீதியரசர்கள் கலாநிதி ஏ.ஆர்.பி. அமரசிங்க, எஸ். டபிள்யூ. பி.வடு

(12ஆம் பக்கம் பார்க்க)


பெற்றோர்களே!

வடக்கு - கிழக்கில் போலியோ மறைந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது!

உங்கள் குழந்தையை போலியோ பீடிக்காமல் இருக்க எதிர்வரும் சனியன்று (22.09.2001) தவறாது போலியோ தடுப்பு சொட்டுமருந்து கொடுங்கள்!

மறந்துவிடாதீர்கள்!!

MANKIND IS OUR BUSINESS

PolioPlus Rotary International

- யாழ்.றோட்டறிக் கழகம்


இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மருந்தை மாற்றிக் கொடுத்ததால் குழந்தை பரிதாபகரமாக மரணம்

## டாக்டரை நீதிமன்றில் ஆஜராக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20
சிகிச்சையின் போது தனியார் மருந்தக டாக்டர் ஒருவர் மருந்தை மாற்றிக் கொடுத்ததாகக் கூறப்படும் சம்பவத்தில் மூன்று வயதுக் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்தது.

சுழிபுரத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் முருகானந்தம் மதனிகா என்ற பெண் குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தது.

இது குறித்துத் தெரிவிக்கப்படுவதாவது:-

இருமல், சளியினால் பீடிக்கப்பட்டிருந்த குழந்தையை சிகிச்சைக்காகப் பெற்றோர் அருகில் இருந்த தனியார் மருந்துவமனை ஒன்றுக்கு கடந்த 17ஆம் திகதி அழைத்துச் சென்றனர். அங்கு குழந்தையைப் பரிசோதித்த டாக்டர் சளிக்கான மருந்தெனத் தெரிவித்து ஒருவகை திரவத்தைக் கொடுத்து, குழந்தைக்கு வழங்குமாறு கூறி அனுப்பி வைத்தார்.

வீட்டுக்கு வந்ததும் பெற்றோர் இரு தடவைகள் அந்த மருந்தைக் குழந்தைக்குப் பருகக் கொடுத்தனர். மருந்தை அருந்தியதும் குழந்தை இனம்புரியாத அவஸ்தைக்குள்ளாகி வேதனைப்பட்டது.

இதனை அவதானித்த குழந்தையின் தந்தை மறுநாள் அந்த மருந்தில் சிறிதளவைத் தொட்டு வாயில் வைத்துப் பார்த்தார். தாங்கமுடியாத எரிவு ஏற்பட்டது.

உடனடியாகப் பெற்றோர் குழந்தையைத் தூக்கிக்கொண்டு மருந்தையும் கொண்டு குறிப்பிட்ட தனியார் மருந்தகத்துக்கு ஓடினர். விடயத்தை டாக்டருக்கு விளக்கினர்.

மருந்தை வாங்கிப் பார்த்த டாக்டர் குழந்தையைப் பரிசோதித்துவிட்டு, உடனடியாகக் குழந்தையை யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லுமாறு கூறினார்.

உடனடியாக யாழ்.ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட குழந்தை அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டது. பின்னர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் குழந்தையின் உயிர் பிரிந்தது.

குழந்தையின் மரணம் தொடர்பான மரண விசாரணையை மல்லாகம் மாவட்ட நீதிவான் மேற்கொண்டார். மருந்தினை மாற்றிக் கொடுத்ததாகக் கூறப்படும் டாக்டரை விசாரணையின் பொருட்டு இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு அவர் உத்தரவிட்டார்.

இறந்த குழந்தை அந்தப் பெற்றோருக்கு ஒரே குழந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-15)

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க 8ஆவது மாநாடு தென்னாபிரிக்காவில்!

## டிசெம்பர் 14,15,16ஆம் திகதிகளில் நடக்கும்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் எட்டாவது உலக மாநாடு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14ஆம், 15ஆம்,16ஆம் திகதிகளில் தென்னாபிரிக்காவிலுள்ள நேட்டால் மாகாணத்தின் டேர்பன் மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

தென்னாபிரிக்கக் கூட்டு இணைப்புக்குழுத் தலைவரும், பிரபல தமிழ்ப் பெரியாருமான மிக்கி செட்டி தலைமையில் டேர்பனின் 'கோஸ்ட் அன்ட் கொண்வென்சன் சென்றரில்'' இந்த மாநாடு நடைபெறும்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

"தமிழால் வாழ்வோம்; தமிழால் உயர்வோம்" என்ற தலைப்பில் நடத்தப்படவுள்ள இந்த மாநாட்டில் தமிழ் மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழ்ப் பாரம்பரியம், தமிழர் வரலாறு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் கொடி ஒன்றும் ஏற்றிவைக்கப்படும்.

இலங்கைக் கிளையின் சார்பில் இந்த மாநாட்டில் கலந்துகொள்பவர்களுக்கு உணவு, தங்குமிடவசதி, போக்குவரத்து வசதி என்பன செய்து கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவில் முடங்கிக் கிடக்கும் நுணுக்குக்காட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.20
யாழ்மாநகர சபையின் தாய், சேய சிகிச்சை நிலையங்களின் பயன்பாட்டுக்கு என 'யுனிசெவ்' நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பத்து நுணுக்குக்காட்டிகளும் பயன்படுத்தப்படாமல் வெறுமனே முடங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாய், சேய் நிலையங்களில் அடையாளம் காணப்படும் நோயாளர்களுக்கு இரத்தப் பரிசோதனை மற்றும் மலேரியாப் பரிசோதனை என்பன உட்படப் பல்வேறு பரிசோதனைகளை நோக்கமாகக் கொண்டு 'யுனிசெவ்' நிறுவனத்தால் யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவுக்கு இந்த நுணுக்குக்காட்டிகள் வழங்கப்பட்டிருந்தன.

இவற்றை இயக்குவதற்கென பத்து ஊழியர்களுக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. அவர்களுக்குக் கடமைப்பட்டியலும் வழங்கப்பட்டிருந்தது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகி சுமார் ஒரு வருடம் ஆகிவிட்டபோதும் பணிகள் எவையும் ஆரம்பிக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இவ்வாறு பல லட்சம் ரூபா பெறுமதியான நுணுக்குக்காட்டிகள் முடங்கிக் கிடப்பது குறித்தும் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையால் தாய், சேய் சிகிச்சை நிலையங்களுக்குச் செல்லும் பலர் இரத்தப் பரிசோதனைகளை தனியார் பரிசோதனை நிலையங்களிலேயே மேற்கொள்ள வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)


தயா நகைப் பூங்கா ஆதரவில்
கோப்பாய் வானவில் விளையாட்டுக்கழகம் நடத்தும்
மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி
போட்டிக்கான விவரங்கள்:-
ஒன்பது (9) பேர், பதினைந்து (15) ஓவர்கள் கொண்ட சுற்றுப் போட்டி
விண்ணப்பப் பதிவுக் கட்டணம்: ரூ. 100/=
போட்டிக்கான விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் இடங்களில் பெற்றுப் பூரணப்படுத்தி அங்கேயே ஒப்படைக்கவும்.
1. தயா நகைப் பூங்கா
இல,213 C கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
2. வானவில் விளையாட்டுக் கழகம் -
(கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்பாக)
பிற்பகல் 5 மணிக்குப் பின்பு (புதிய நேரம்)
விண்ணப்ப முடிவு திகதி: 29.09.2001
விளம்பர அனுசரணை:-
அழகிய கலைநயம்,
எழிலுறு தொழில் வளம்,
உயர்தரம்மிகு
தங்க நகைகளுக்கு!
நாடுங்கள்:
தயா TP
நகைப் பூங்கா
இல, 213 C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/18334)


## தமிழ் இலக்கிய விழாவில் கலந்துகொள்வோருக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.20
வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் இலக்கிய விழாவில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்தில் இருந்து அழைக்கப்பட்டவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வெலிங்டன் சந்தியில் உள்ள டி.எம்.ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் திருகோணமலை செல்வதற்கான பயண ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவிருப்பதாகவும் -

எனவே சம்பந்தப்பட்ட விழாவுக்கு அழைக்கப்பட்ட கலாசார உத்தியோகத்தர்கள், ஆளுநர் விருது பெறுவோர், இலக்கிய நூல் பரிசு பெறுவோர் ஆகியோரை தத்தமது பாதுகாப்பு அனுமதிப்பத்திரம், அடையாள அட்டை ஆகியவற்றுடன் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் சங்கம் கேட்டுள்ளது. (ம-7)

# வெளிநாடுகளில் கச்சேரிகள் நடத்திவிட்டு இசைக் கலைஞர் குழு தாயகம் திரும்பியது

யாழ்ப்பாணம்,செப்.20
ஈழத்து பிரபல நாதஸ்வர - தவில் வித்துவான்கள் அடங்கிய குழு ஒன்று ஜேர்மன், பிரான்ஸ், டென்மார்க் ஆகிய நாடுகளில் பதினைந்துக்கும் மேற்பட்ட கச்சேரிகள் நிகழ்த்திவிட்டு நாடு திரும்பியுள்ளது.

இணுவில் அமரர் கோவிந்தசாமியின் புதல்வர் நாதஸ்வர வித்துவான் கோ.இரத்தினகுமார் (மாக்கையா), கொழும்பு நாதஸ்வர வித்துவான் ஆர்.வி.செல்வராஜா ஆகியோரும் இணுவில் அமரர் சின்னராஜாவின் புதல்வர்களான தவில் வித்துவான்கள் ஆர்.ரவீந்திரன், ஆர்.சுதாகரன் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

ஜேர்மன் ஹம் பிள்ளையார் கோயில், டென்மார்க் அபிராமி அம்மன் கோயில், டென்மார்க் பிள்ளையார் கோயில் உற்சவங்களிலும் ஜேர்மன், டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் பல சபாக் கச்சேரிகளிலும் பங்குகொண்டு சிறப்பித்த இக்கலைஞர் குழு தற்போது நாடு திரும்பியுள்ளது. (க-3)

# சங்கரத்தை வீரபத்திரர் சமேத பத்திரகாளி ஆலயத்திற்கு வயல்கள் ஊடாக வெளிவீதி

யாழ்ப்பாணம்,செப்.20
வட்டுக்கோட்டை சங்கரத்தை வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தைச் சூழவுள்ள வயல்கள் ஊடாக ஆலயத்துக்கு வெளிவீதி அமைக்கப்படவிருக்கின்றது.

ஆலயத்தைச் சூழவுள்ள பகுதியில் நெல்வயல்கள் இருப்பதால் ஆலயத்துக்கு வெளிவீதி அமைக்க முடியாதுள்ள நிலை குறித்து அந்தப் பகுதி மக்கள் வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் இந்துசமய விவகாரப் பொறுப்பாளருமான என்.திரிலோகநாதனிடம் முறையிட்டனர்.

இதையடுத்து அவர் அந்தப் பகுதியில் உள்ள வயல்களின் உரிமையாளர்களுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடினார்.

அவர்கள் வீதி அமைக்க இணக்கம் தெரிவித்ததை அடுத்து வீதிக்கு எல்லையிடும் பணி நேற்று இடம்பெறவிருந்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சில் இருந்து நிதி உதவி பெற்று வீதியை செப்பனிடப் போவதாக திரிலோகநாதன் தெரிவித்தார். (க-3)

# தீவக லயன்ஸ் கழக ஏற்பாட்டில் காரைநகரில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,செப்.20
காரைநகரில் வாழும் மக்களின் நலன் கருதி மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும், தீவக லயன்ஸ் கழகமும் இணைந்து யாழ்.போதனா வைத்தியசாலை பிரபல வைத்திய நிபுணர்களின் ஒத்துழைப்புடன் நடத்தும் இலவச மருத்துவ கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைநகர் டாக்டர் தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 8.00 மணி முதல் 12.00மணிவரை நடைபெறும்.

இந்த இலவச மருத்துவ முகாமில் சகல நோய்களுக்குமான வைத்திய சேவை மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் பிரபல வைத்திய நிபுணர்களான, காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.சிவசுப்பிரமணியம், கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாஸன், மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் ஜி.பவானி, பொது வைத்திய நிபுணர் டாக்டர் கே. மகேசன் ஆகியோரால் இம்முகாமில் சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

கண்விழிப்படலத்தால் (கற்றாக்) பாதிப்புக்குள்ளானோர் கண் சத்திர சிகிச்சையை யாழ். போதனா வைத்திய சாலையில் மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேவை ஏற்படின் கண்ணாடி வில்லைகளும் பெற்றுக்கொடுக்கப்படும்.

கண்பார்வை பரிசோதனை மேற்கொள்ளப்படுவதுடன், மூக்குக்கண்ணாடி பாவிக்க வேண்டியவர்களுக்கும் அன்றைய தினமே மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும். ஏனைய நோய்களுக்கான மருந்து வகைகளும் இலவசமாக வழங்கப்படும். (ம-15)

## கலந்துரையாடல்

தென்மராட்சி,செப்.20
வடமராட்சியில் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை நெல்லியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறும்.

வடமராட்சியில் இயங்கும் வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் விபரங்கள் (பிறந்த, இடம்பெயர்ந்த), கல்வி முன்னேற்ற அறிக்கை ஆகியவற்றுடன் வருகை தருமாறு வடமராட்சி பாலர் ஆசிரியர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ம-117)

## கால் இறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.20
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் திக்கமுனை மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் கால் இறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - டைமன் வி.க. அணி எதிர் வல்வை வி.க. அணி.

★ மாலை 4.30 மணி - அல்வாய் வி.க. அணி எதிர் கலைமதி வி.க. அணி. (ம)

## மற்றொரு மாணவர் அணி திருமலை சென்றது

யாழ்ப்பாணம்,செப்.20
மாகாணங்களுக்கு இடையிலான தேசிய மட்டப் பாடசாலைத் தமிழ்மொழி தினப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள யாழ்மாவட்ட மாணவர்களின் இரண்டாவது அணி நேற்று முன்தினம் கப்பல் மூலம் திருமலை சென்றுள்ளது.

இவர்களுக்கான குழுப்போட்டிகள், இசை மற்றும் நடனப் போட்டிகள் யாவும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இக்குழுவில் 11 மாணவர்கள் உட்பட சுமார் 36 பேர் சென்றுள்ளனர். (க-10)

## 'ஆசிரியன்' வெளிவந்துள்ளது

யாழ்ப்பாணம்,செப்.20
இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வெளியீடான 'ஆசிரியன்' பத்திரிகை நீண்டகாலத்திற்குப் பின் வெளிவந்துள்ளது.

இப்பத்திரிகையில் இவ்வருடத்தின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் எழுச்சி மாநாடு பற்றிய செய்திகளும், சங்கத்தின் செயற்பாடுகளும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை சங்க அங்கத்தவர் எல்லோருக்கும் விநியோகிக்கப்படும் என்றும் சகல கிளைச் செயலாளர்களும் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் சங்கத்தின் தலைமைப் பணிமனையில் வந்து இப்பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பின்லேடனை ஒப்படைப்பது இனி தலிபான்களின் பிரச்சினை

## பாகிஸ்தானிய அமைச்சர் விரக்தி

இஸ்லாமாபாத்,செப்.20

இஸ்லாமிய தீவிரவாதி ஒஸாமா பின்லேடனை மத்தியஸ்த அமைப்பு ஒன்றிடம் ஒப்படைப்பது தொடர்பாக ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்களுடன் பேச்சு நடத்திய பாகிஸ்தானியத் தூதுக்குழுவினர், முடிவு எதுவும் காணாமற் திரும்பினர்.

பேச்சுப் பற்றிய விவரங்களை வெளியிட பாகிஸ்தானிய வெளிவிவகார அமைச்சர் அப்துல் சதார் மறுத்துவிட்டார்.

நிலைமையின் பயங்கரத்தையும், உலக நாடுகளின் எதிர்பார்ப்பையும் பாகிஸ்தானியக் குழுவினர் தலிபான் தலைவர்களுக்கு உணர்த்தியுள்ளதாக மட்டும் அவர் தெரிவித்தார்.

இனி ஆப்கானிஸ்தானிய மக்களின் நலன்கருதி முடிவெடுக்க வேண்டியது தலிபான்களின் பொறுப்பு என்றும் அவர் கூறினார்.

பில்லேடனை ஒப்படைப்பது குறித்த முடிவை ஆப்கானிஸ்தான மதத் தலைவர்களிடமும், தலிபான் அரசிடமும் விட்டுவிட்டதாக விரக்தியான குரலில் சதார் கூறியதாகச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

## உலக அரங்கில்

இதேவேளை -

பின்லேடனை எந்தவித நிபந்தனைகளுமின்றி மத்தியஸ்த அமைப்பு ஒன்றிடம் தலிபான்கள் ஒப்படைக்க வேண்டுமென்று ஐ.நா பாதுகாப்புச் சபையின் தலைவர் டேவிட் லெவிக் கேட்டுள்ளார். (ஓ-9)

## ஆப்கானிஸ்தானில் அவசரகாலநிலை

# பாடசாலைகள் மூடப்பட்டன; மாணவர் கைகளில் ஆயுதங்கள்!

காபூல்,செப்.20

அமெரிக்காவின் தாக்குதலை எதிர்பார்க்கும் ஆப்கானிஸ்தானிய தலிபான் ஆட்சியாளர்கள் தேசிய நெருக்கடி நிலை ஒன்றைப் பிறப்பித்துள்ளனர்.

மதப் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் -

அங்குபடித்த மாணவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டு, போர் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் -

தலிபான் படைகள் போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டுவருவதாகவும் -

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், பின்லேடனை ஒப்படைப்பது தொடர்பாக விவாதிக்க ஆப்கானிஸ்தானின் இஸ்லாமிய உயர் சமயத் துறவிகள் காபூலில் கூடியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற வேண்டிய இந்தக் கூட்டம் துறவிகள் பலரும் காபூல் வந்துசேரத் தாமதமாவதால் ஒத்திவைக்கப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, சுமார் 500 தற்கொலைத் தாக்குதலாளிகளின் பாதுகாப்புடன் குதிரைகளில் ஏறி, பெயர் குறிப்பிடப்படாத மறைவிடமொன்றை நோக்கி பின்லேடன் சென்றதாக உறுதிசெய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.(ஓ-9)

## முதல் தடவையாக ஐ.நா.கூட்டம் ஒத்திவைப்பு!

நியூயோர்க்,செப்.20

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தொடர் முதல்முறையாக காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நியூயோர்க் மற்றும் வாஷிங்ரனில் இடம்பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களையடுத்து ஐ.நாவின் ஆண்டுக் கூட்டத்தொடர் முதல் தடவையான ஒத்திவைக்கப்பட்டது. (ஓ)

## மதத்தலைவர்கள் கண்டனம்!

தெஹ்ரான்,செப்.19

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடுக்கும் போரினால் பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் - அது அமெரிக்காவுக்குப் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்றும் - ஈரானிய மதத்தலைவர் அயதுல்லா அலி கொமெனி தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

இந்த விவகாரம் குறித்து, 55 நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய மாநாட்டு அமைப்பைக் கூட்டி விவாதிக்க வேண்டும் என்று ஈரானிய அதிபர் முகமட் கடாமி கோரியுள்ளார். (ஓ)

## சீனா எதிர்ப்பு!

பெய்ஜிங்,செப்.20

ஆப்கானிஸ்தானைத் தாக்குவதற்காக, ஆசியப் பகுதியில் அந்நிய இராணுவம் இறங்குவதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

சீனாவின் சிறப்புத் தூதுவர் ஒருவர் பாகிஸ்தானுக்கு விரைந்துள்ள சமயத்தில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. (ஓ)

# அமெரிக்க விபரீதம் - எண் 11 தற்செயல் பொருத்தங்கள்

ஒஸ்லோ,செப்.20

அமெரிக்காவில் நிகழ்ந்த விமானத் தற்கொலைத் தாக்குதல்களுக்கும் பதினொன்று என்ற எண்ணுக்கும் தற்செயலான பொருத்தங்கள் உள்ளதாக எண்ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர்.

தாக்குதல்கள் இடம்பெற்ற திகதியான 11, இந்த வருடத்தின் 254 ஆவது நாள் ஆகும். இதனைக் கூட்டினாலும் (2+5+4=11) பதினொன்று என்றே ஆகிறது. செப்ரெம்பர் 11 ஆம் திகதியின் பின்னர், ஆண்டு முடிவுக்கு 111 நாள்களே உள்ளன.

11 ஆம் திகதி 9 ஆம் மாதம் நடைபெற்ற தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஈராக், ஈரான் ஆகியவற்றின் பிரதேசக் குறியீட்டு எண் 119 ஆகும். இதனைக் கூட்டினாலும் (1+1+9=11) பதினொன்றே வருகிறது.

உலக வர்த்தக மைய இரட்டைக் கட்டடங்கள் அருகருகே 11 என்ற எண்ணின் வடிவத்திலேயே இருந்தன.

அவற்றில் முதல் கோபுரத்தின் மீது மோதிய விமானத்தின் சேவை எண் - 11.

நியூயோர்க் நகரம் அமெரிக்காவின் 11 ஆவது மாநிலமாகக் குறிப்பிடப்படுகிறது. NEWYORK CITY (நியூயோர்க் சிட்டி) AFGHANISTAN (ஆப்கானிஸ்தான்), THE PENTAGON (த பென்டகன்) ஆகியவற்றில் தலா பதினொரு எழுத்துக்கள் உள்ளன.

முதல் விமானத்தில் பயணிகள் 92 பேர் (9+2=11). இரண்டாவது விமானத்தில் 65 பேர் (6+5=11).

இப்படி பதினொன்று என்ற எண், உலக வர்த்தக மையத்தின் மீது இடம்பெற்ற தாக்குதலுடன் பல விதங்களில் ஒத்துப் போவது தற்செயலா? விதிவசமா?. (ஓ)

# மலேஷியாவில் நடமாடிய தற்கொலைத் தாக்குதலாளிகள்

கோலாலம்பூர்,செப்.20

அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதல்களில் சம்பந்தப்பட்டவர்களெனச் சந்தேகிக்கப்படும் பலர், தாக்குதலுக்கு சில வாரங்களின் முன்னர், உல்லாசப் பயணிகளாக மலேஷியாவில் நடமாடியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபர்கள் காணப்படும் 'வீடியோ' நாடா ஒன்றை மலேஷியப் பொலீஸார் கண்டுபிடித்ததாகவும் -

கடந்த ஆண்டு ஒக்ரோபரில் யேமனில் அமெரிக்க யுத்தக் கப்பல் மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர்களுடன், பென்டகன் மீதான தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் காயல் அல்மீதா உரையாடுவது, அந்த ஒளிநாடாவில் காணப்படுவதாகவும் -

மலேஷியப் பொலீஸ் துறைப் பேச்சாளர் நேரோமாய் கூறினார்.

இதேவேளை, ஒஸாமா பின்லேடனுக்கு மலேஷிய வங்கியொன்றில் கணக்கு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

# பாகிஸ்தானில் குண்டுவெடித்து 6தொழிலாளர்கள் உயிரிழப்பு!

இஸ்லாமாபாத்,செப்.20

பாக்கிஸ்தானில் சந்தைப் பகுதியொன்றில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 6தொழிலாளர்கள் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

சியால்கோட் நகரின் பிரதான சந்தையருகே நேற்றுக்காலை இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது.

வேலைகளுக்குச் செல்வதற்காகச் சந்தையருகே கூலித் தொழிலாளர்கள் திரண்டிருந்ததாகவும் -

அந்தச் சமயத்தில் அங்கு அநாதரவாக நின்றிருந்த சைக்கிள் ஒன்றிலிருந்த ஊயில் வைக்கப்பட்டிருந்த சக்திமிக்க வெடிகுண்டு வெடித்ததாகவும் - கூறப்படுகிறது.

அமெரிக்காவுக்குச் சார்பாக இராணுவ ஆட்சியாளர் முஷாரப் நடந்து வருவதாகக் கூறி எதிர்க் கட்சிகளும், மதத்தலைவர்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் வேளையில், இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆகவே இது தொடர்பாக எழுந்துள்ள எதிர்ப்புக் காரணமாக குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. (ஓ)

# முதலாவது விமானத்தைக் கடத்தியவர் ஈராக் உளவு அமைப்பின் கூட்டாளி

## அமெரிக்கப் புலனாய்வுப்பிரிவு தெரிவிப்பு

வாஷிங்ரன்,செப்.20

அமெரிக்க உலக வர்த்தகமையக் கட்டடங்களின் மீது தாக்குதல் நடத்திய முதலாவது விமானத்தைக் கடத்திய நபர் ஒருவர் குறித்த விவரங்களை அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு வெளியிட்டது.



மொகமட் அசா

எகிப்தியரான மொகமட் அசா (வயது33) என்பவரே முதல் விமானத்தை கடத்தியவர் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் கல்விகற்ற அசா, ஈராக்கிய உளவுப் பிரிவினருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததாகவும -

ஆனால் தாக்குதலுக்கும் ஈராக்குக்கும் தொடர்பு உண்டா? என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் -

இது தொடர்பாக ஆழமாக ஆராயப்பட்டு வருவதாகவும் -

புலனாய்வு அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

விமானத் தற்கொலைத் தாக்குதலுக்கு ஒஸாமா பின்லேடனே காரணமென்று கருதப்பட்டு வந்த வேளையில், ஈராக் உளவு அமைப்புடன் தொடர்புடையவரே விமானத்தைக் கடத்தியது தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-9)

## பலஸ்தீனப் பிரதேசங்களில்

# இராணுவ நடவடிக்கை நிறுத்த இஸ்ரேலியப் பிரதமர் உத்தரவு!

ஜெருசலேம்,செப்.20

பலஸ்தீனப் பிரதேசங்களில் அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்துமாறு நேற்றுமுன்தினம் இரவு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தமது படைகளுக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து இஸ்ரேலிய. டாங்கிகள் உட்பட கனரக வாகனங்கள் பலஸ்தீனப் பகுதிகளை விட்டு வெளியேறியதாகவும் -

இஸ்ரேலிய இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடங்கியதுடன் வெகு குறைவான எண்ணிக்கையிலேயே, அவர்கள் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பகலில், பலஸ்தீனர்கள் 48 மணிநேர யுத்த நிறுத்தம் மேற்கொண்டால் மட்டுமே, அமைதிப் பேச்சு ஆரம்பிக்கப்படுமென பிரதமர் ஷெரோன் தெரிவித்திருந்தார்.

இந்த யோசனையை பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் வரவேற்றிருந்தார்.

இதனையடுத்து, ஒருதலைப்பட்சமான - 48 மணிநேர - யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளப் பிரதமர் ஷெரோன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பலஸ்தீனத் தீவிரவாதிகள் ஒத்துழைப்பதிலேயே, இந்த யுத்த நிறுத்தத்தின் வெற்றி தங்கியுள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர். (ஓ)

## வர்த்தக நடவடிக்கைகள் நிறுத்தம்

இஸ்லாமாபாத்,செப்.19

ஆப்கானிஸ்தானுடன் உணவுப் பொருள்கள் வர்த்தகம் தவிர்ந்த அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையும் பாகிஸ்தான் நிறுத்திவைத்துள்ளது.

எல்லைப் பகுதிகளினூடாகப் பாகிஸ்தானுக்குள் வரும் ஆப்கானிஸ்தானிய அகதிகளை, எல்லைப் பகுதி முகாம்களிலேயே தடுத்து வைக்கவும் பாகிஸ்தான் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. (ஓ)

## சட்டச்சிக்கல்கள் ஒருபுறமிருக்க

# ஆண்டிப்பட்டியில் போட்டியிட முதல்வர் ஜெயலலிதா முஸ்தீபு?

சென்னை,செப்.20

தேர்தலில் போட்டியிடுவதற்கு சட்டச்சிக்கல்கள் ஒருபுறமிருக்க, இடைத்தேர்தல் ஒன்றில் போட்டியிடும் முஸ்தீபுகளில் தமிழக முதல்வர் ஜெயலலிதா இறங்கிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆண்டிப்பட்டித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த தங்க. தமிழ்ச்செல்வன் தனது பதவியை இராஜினாமாச் செய்திருப்பது, ஜெயலலிதாவின் பிரயத்தனத்தை உறுதிப்படுத்துவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

நேற்றுச் செய்தியாளர்களை திடீரென்று சந்தித்த சபாநாயகர் காளிமுத்து,

தங்க.தமிழ்செல்வன் சட்ட மன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுவதாகக் கடந்த 15 ஆம் திகதி கடிதம் தந்ததாகவும் -

அவரது பதவிலகலைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும் - தெரிவித்தார்.

தி.மு.க. உறுப்பினர் பெருமாள் இறந்ததால், காலியான சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கும், தங்க. தமிழ்ச்செல்வனின் இராஜினாமாவால் காலியாகியுள்ள ஆண்டிப்பட்டித் தொகுதிக்கும் விரைவில் இடைத்தேர்தலை நடத்தும்படி மாநிலத் தேர்தல் ஆணையாளருக்குத் தான் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் காளிமுத்து மேலும் கூறினார்.

சட்டமன்ற உறுப்பினராவதன் மூலம், ஜெயலலிதா முதல்வர் பதவியைத் தக்க வைப்பதற்கான காலக்கெடு எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஆனாலும், அவர் தேர்தலில் போட்டியிடும் தகுதியைப் பெறுவது தொடர்பான சட்ச் சிக்கல்கள் குறித்த வழக்குகள் நீதிமன்றங்களில் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், எவரும் எதிர்பாராத வகையில், அதிரடி முடிவுகளை எடுப்பதில் 'புகழ்பெற்ற' ஜெயலலிதா, ஆண்டிப்பட்டியில் போட்டியிட என்ன செய்யப் போகிறார்? என்பதே அனைவரின் ஆவலைத் தூண்டும் கேள்வியாகும்.

அ.தி.மு.க. நிறுவுநர் எம்.ஜீ.ஆர். உடல்நலக்குறைவால் அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபோது நடந்த தேர்தலில் - தொகுதிக்குச் செல்லாமலே - படுத்துக்கொண்டே - வென்ற தொகுதி மதுரை மாவட்ட ஆண்டிப்பட்டித் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## பங்களாதேஷ் அனுமதி

டாக்கா,செப்.20

பயங்கரவாதத்துக்கு எதிராக எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைக்காக தனது வான் பகுதியையும், விமானத் தளங்களையும், துறைமுகங்களையும் அமெரிக்கா பயன்படுத்திக்கொள்ள முஸ்லிம் நாடான பங்களாதேஷ் அனுமதித்துள்ளது. (ஓ)

## கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட
# சங்கானைவாசிகள் இருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், செப். 20
சட்டவிரோதமாகக் கசிப்பு விற்பனை செய்த இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் மல்லாகம் நீதிவான் பா. சுப்பிரமணியத்தால் விதிக்கப்பட்டது.

சங்கானையைச் சேர்ந்தவர்களான யோகராசா பிரேமதாஸ் என்பவர் 134 போத்தல் கசிப்புக் கோடாவுடனும்—

அதேயிடத்தைச் சேர்ந்த இராசையா பாலச்சந்திரன் என்பவர் 120 போத்தல் கசிப்புடனும்—சங்கானைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த வழக்குகளை விசாரணை செய்த நீதிவான் இருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் இருவரையும் கடுமையாக எச்சரிக்கை செய்தார்.
(க-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலிகாமம் வலய சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் அடுத்த வாரம் முதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

14,16,18 வயதுப்பிரிவுகளின் கீழ் இப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. 14 வயதுப் பிரிவின் கீழ் நான்கு பிரிவுகளில் பன்னிரெண்டு பாடசாலைகள் போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

'அ' பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டு மத்திய கல்லூரி, அராலி சரஸ்வதி வித்தியாலயம் ஆகியனவும் —

''ஆ'' பிரிவில் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாலயம், அராலி கிழக்கு அ. த. மி. த. க. பாடசாலை, தொல்புரம் விக்னேஸ்வராக் கல்லூரி ஆகியனவும் —

'இ' பிரிவில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம், சித்தன்கேணி கணேச வித்தியாலயம், காட்டுப்புலம் அ. மி. த. க. பாடசாலை ஆகியனவும் —

'ஈ' பிரிவில் வட்டு இந்துக் கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி ஆகியனவும் — பங்குபற்றுகின்றன.

16 வயதுப் பிரிவில் 9 பாடசாலைகள் இரண்டு பிரிவுகளின் கீழ் போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

''அ'' பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, வட்டு. மத்திய கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் ஆகியனவும்—

''ஆ'' பிரிவில் அராலி இந்துக் கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம், மூளாய் சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகியனவும் — கலந்து கொள்ளவுள்ளன,

18 வயதுப் பிரிவில் 7 பாடசாலைகள் இரண்டு பிரிவுகளின் கீழ் போட்டியிட உள்ளன.

''அ'' பிரிவில் அராலி இந்துக் கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகியனவும்—

''ஆ'' பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், வட்டு. மத்திய கல்லூரி, மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம் ஆகியனவும் — கலந்து கொள்ளவுள்ளன.
(ம-86)

★ ★ ★

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

### 14 வயதுப் பிரிவு

★ சில்லாலை ஆர்.சி. வித்தியாலய அணி எதிர் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அணி.

### 16 வயதுப் பிரிவு

★ பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலய அணி எதிர் மாதகல் சென். ஜோசப் வித்தியாலய அணி.

### 18 வயதுப் பிரிவு

★ இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அணி எதிர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணி.
(ம-86)

★ ★ ★

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

★ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அணி எதிர் சுன்னாகம் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலய அணி.

★ கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி எதிர் இணுவில் மத்திய கல்லூரி அணி.

### 18 வயதுப் பிரிவு

★ சுன்னாகம் மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலய அணி எதிர் இணுவில் மத்திய கல்லூரி அணி.
(ம-86)

★ ★ ★

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

### 16 வயதுப் பிரிவு

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி எதிர் வசாவிளான் மகாவித்தியாலய அணி.

★ மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலை அணி எதிர் இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணி.

### 18 வயதுப் பிரிவு

★ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணி எதிர் தெல்லிப்பழை கட்டுவன்புலம் வித்தியாலய அணி
(5-6)

## கலை விழா

ஆனைக்கோட்டைப் பிரதேச குடும்பப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டு விழாவும், கலை விழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் அன்ரன் ஜோன்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 750 மாணவர்கள் இவற்றில் பங்கு கொள்வர்.
(ம-7)

## வீதி திருத்தம்

மிக நீண்டகாலங்களாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் குண்டும், குழியுமாக காணப்பட்ட புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதித்திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.
(க-15)

## கத்திக்குத்து

யாழ்ப்பாணம், செப். 20
மதுபோதையில் வந்த ஒருவர் மண்எண்ணெய் வியாபார நிலையம் ஒன்றில் தகராறு புரிந்த வேளை கடை உரிமையாளருக்கும், அவருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பு கத்திக்குத்தில் முடிந்தது.

கச்சேரி நல்லூர் வீதிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் மதுபோதையில் இருந்தவர் இடுப்பில் சொருகி வைத்திருந்தகத்தியை எடுத்து குத்தியதால் கடை உரிமையாளரான தங்கரட்ணம் தவராசா (வயது 40) என்பவர் கையில் பலத்த காயத்திற்குள்ளானார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
(க-15)

## பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், செப். 20
இலங்கை நிர்வாக சேவை வகுப்பு 2 பரீட்சை மற்றும் சமுர்த்தி அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைஆகியவற்றில்தோற்றவுள்ளோருக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்விவலய வட்டாரங்கள் தெரிவித்தன.
(க-10)

## வணிகக்கல்வி கருத்தரங்கு வைத்தீஸ்வராவில்

யாழ்ப்பாணம், செப்.20
யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடத்தப்பட இருந்த யாழ். வலய வர்த்தக ஆசிரியர்களுக்கான (தரம் 10, 11) கருத்தரங்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமையும் மறுதினம் சனிக்கிழமையும் நடைபெறும் என யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
(க)

## பழைய மாணவர் சங்க ஆஸ்திரேலிய கிளை

யாழ்ப்பாணம், செப். 20
யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஆஸ்திரேலியா கிளை அண்மையில் அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர்கள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் இணைந்து இந்தக் கிளையை அமைத்துள்ளனர்.

கல்லூரியின் வரலாறு மற்றும் பிற விடயங்களை உள்ளடக்கிய 'சங்கநாதம்' என்னும் கையேடு ஒன்றையும் இவர்கள் ஆஸ்திரேலியாவில் வெளியிட்டிருக்கின்றனர்.

கல்லூரியின் பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கு இடையே நட்புறவு, தோழமை, நல்லெண்ணம் என்பவற்றை வளர்க்கும் நோக்குடன் கலந்துரையாடல்களை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செங்குந்த இந்துக் கல்லூரிக்கு றோணியோ மற்றும் தட்டச்சு இயந்திரங்களை வழங்க ஆஸ்திரேலிய பழைய மாணவர் சங்கத்தினர் முன்வந்திருப்பதாக கல்லூரி அதிபர் திருமதி சி. விஸ்வலிங்கம் தெரிவித்தார்.
(ஐ)

# தவறவிட்ட அ. அட்டைகள் யாழ். பொலீஸ் நிலையத்தில்

யாழ்ப்பாணம், செப். 20
குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட மேலும்ஒரு தொகுதி அடையாள அட்டைகள் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்டுள்ள அடையாள அட்டைகளுக்குரியவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

### விசேட அ. அட்டை

சுப்பிரமணியம் கனகராசா (வட்டுக்கோட்டை கிழக்கு சங்கானை), முத்துக்குமாரு நடராசா (பழைய கண்டி, காரைநகர்), இராசா சச்சிதானந்தன் (குருநாதசாமி கோயிலடி வித்தகபுரம்).

விசுவநாதர் தணிகாசலம் (புத்தூர் மேற்கு, சிவன் கோயிலடி), சின்னராசா சதீஸ்வரன் (முருகமூர்த்தி றோட், வண்ணார்பண்ணை) சிவக்கொழுந்து நாகராசா (தோப்பு வீதி, மட்டுவில் வடக்கு), சிற்றம்பலம் நல்லம்மா (சந்தாதோட்டம், புலோலி, பருத்தித்துறை).

### தேசிய அ. அட்டை

சிவஞானம் தனலட்சுமி (இல 9/1 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்), பொன்னையா கசிதா (எட்டாம் யுனிற், தர்மபுரம் கிழக்கு, பளை), நவரட்ணம் ஆறுமுகசாமி பிரான்பற்று, சங்கானை), குட்டியன் பாலசிங்கம் (இல. 766, குட்செட் வீதி, கோண்டாவில் மேற்கு)

சரவணமுத்து கனகசபை (வலி. வடக்கு, மல்லாகம்), சிவரத்தினம் மணிபல்லவன் (இல 81/2, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி), தர்மலிங்கம் ரவீந்திரன் (இல. 307 A செபஸ்தியன் வீதி, கோண்டாவில்)

நடராசா திருவேலழகன் (இல. 214 வதிரி, கரவெட்டி) குமரேசு பொன்னையா கனகலிங்கம் (இல. 45 சீனிவாசகம் வீதி, கொட்டடி) சிற்றம்பலம் நல்லம்மா (சந்தா தோட்டம், புலோலி).

இவர்கள் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு வந்து தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒருதொகுதி அடையாள அட்டைகள் ஒப்படைக்கப்பட்டமை தெரிந்ததே.
(க-4)

## கப்பல் பயண பதிவு நாளை

எதிர்வரும் 27 ஆம் திகதியும் அடுத்த மாதம் 2 ஆம் திகதியும் காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்குச் செல்லவுள்ள ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பலில் செல்வதற்கான பயணப் பதிவுகள் யாவும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று 'நான்' அலுவலகம் அறிவித்துள்ளது.
(க-10)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா சின்னம்மா

கைதடி மேற்கைச் சேர்ந்த திருமதி கந்தையா சின்னம்மா அவர்கள் நேற்று முன்தினம் (18–09–2001) செவ்வாய்க்கிழமை சுவிஸ்லாந்தில் காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், சுவிஸில் உள்ள நற்குணபூபதியம்மா, ஜெயாவதி, சுவர்ணசிங்கம், சுபாசிங்கம், டென்மார்க்கிலுள்ள தர்மகுலசிங்கம், லண்டனிலுள்ள நற்குணபூபாலசிங்கம், ஜெயவீரசிங்கம், கொழும்பிலுள்ள மல்லிகாவதி, சுயாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுவிஸிலுள்ள நா. கந்தசாமி, க. ரஞ்சன், டென்மார்க்கிலுள்ள லலிதா, கொழும்பிலுள்ள சரோஜாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. சின்னத்தம்பி
கைதடி மேற்கு.
(92492)

## கந்தையா நாகமணி

காரைநகர் அழகாபுரியை நிரந்தர வசிப்பிடமாகவும் அராலி செட்டியார்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகமணி 16-09-2001 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்,

அன்னாரின் பூதவுடல் நாளை (21 – 9 - 2001) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அராலி செட்டியார்மடத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு அராலி வடக்கு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
நா. அருளானந்தம் (அருள்)
நா. மணிவண்ணன்
(மகன்மார்)
அராலி வடக்கு,
செட்டியார்மடம்.
(92487)

## செல்வி முருகானந்தம் மதனிகா

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி முருகானந்தம் மதனிகா நேற்று (19-9 2001) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் முருகானந்தம் . சுபோதினி (பேபி) தம்பதிகளின் அன்பு மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (20- 09- 2001) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருவடிநிலை இந்து மயானத்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. சரவணபவன்
(ஆனந்தன்)
சுழிபுரம் கிழக்கு.
சுழிபுரம்.
(92491)

உதயன்

## கசிப்புக்கு எதிராக சமூக எழுச்சி தேவை

குடாநாட்டுப் பொலீஸ் நிலையங்களுக்கு வரும் பல பிணக்குகள், சண்டைகள், சச்சரவுகளின் பின்னணியிலும் -

குடாநாட்டு ஆஸ்பத்திரிக்கு வரும் - கணிசமான எண்ணிக்கையுடைய - வயதுவந்த நோயாளர்களின் - பிரச்சினைகள், பிணிகளின் பின்னணியிலும் - இருப்பது பெரும்பாலும் ஒரே விடயம் தான்.

கசிப்பு; சட்டவிரோதமான மது பாவனை. உள்ளூர்த் தயாரிப்புக் குடிவகைகளின் கொடூரம்தான்.

சட்டம், ஒழுங்கு சரிவர நிலை நிறுத்தப்படாத - நிலைநிறுத்தப்பட முடியாத - இந்த யுத்த காலத்தில் பல சமூக விரோதச் செயல்கள் தலை விரித்தாடத் தொடங்கியிருக்கின்றன.

சரிவரத் தட்டிக் கேட்போர் இல்லாததால், இஷ்டப்படி அட்டகாசம் செய்வோர் - 'குட்டிச் சண்டியர்கள்' - நாட்டில் அதிகரித்துவிட்டனர்.

இவற்றுக்குப் பின்னணியில் வலுவூட்டும் சக்தியாக இருப்பது பெரும்பாலும் மதுதான். அதுவும் உள்ளூர்த் தயாரிப்புக் கசிப்பு அரக்கன் தான் எங்கள் விடலைப்பருவம் தாண்டிய இளசுகளுக்குச் சட்டம் மீறிய சண்டித்தனத்தைத் தரும் தாகபானமாக அமைந்துள்ளது.

அத்தோடு அருந்துவோருக்குக் குறைந்த செலவில் அதிக 'கிக்' கிடைக்க வேண்டும், அதன் மூலம் தமது தயாரிப்பின் பெருமை பரவ வேண்டும் என்ற நோக்கத்தில் - மருத்துவப் பாதிப்புகள், சுகாதாரக் கேடுகள் போன்றவை குறித்து ஏதும் சிந்திக்காமல் - கசிப்பு உற்பத்தியாளர்கள் தங்கள் திருவிளையாடல்களைக் காட்டுவது சமூகப் பேரழிவுக்கு வழிகோலி நிற்கின்றது.

ஒருபுறம் பொலீஸாரும் மறுபுறம் மதுவரித் திணைக்கள அதிகாரிகளும் முயற்சித்தாலும் கூட இருதரப்பினருக்கும் போக்குக் காட்டிக்கொண்டு தங்களின் கைவரிசையை கசிப்பு மன்னர்கள் காட்டிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

தினசரி நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்படும் - கசிப்புச் சார்ந்த - வழக்குகள் இதற்குச் சான்று.

நேற்றுமுன்தினம் நாவாந்துறையில் பெரும் கசிப்புக் குகை ஒன்றே கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. கசிப்பு விவகாரம் வெறும் உற்பத்தியோடு மட்டும் அமையும் விடயமல்ல. விற்பனை - பாவனை தொடர்பில் ஒரு பெரிய வலைப்பின்னலே உண்டு. எனவே உற்பத்தியாளர்களை மட்டுமல்லாமல் அதனோடு சங்கிலித் தொடர்பாக அமைந்திருக்கும் ஏனையோரையும் சட்டத்தின் முன்னால் நிறுத்தாதவரை இத்தகைய சமூகவிரோதச் செயல்களையும் முற்றாகத் தடுத்து நிறுத்துவது இயலாத காரியம்.

கசிப்பின் பாதிப்பை நமது மக்களுக்கு எடுத்து விளக்கும் - பிரசாரப்படுத்தும் - நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவேண்டும்.

தவிரவும், கசிப்பு என்ற சமூக விரோத அரக்கனை சமூகத்திலிருந்து ஒழிக்கும் பொறுப்பு பொலீஸாருக்கும், கலால் திணைக்கள அதிகாரிகளுக்கும், கிராம சேவையாளருக்கும மட்டுமே உரியது என்று நினைத்து, சமூகம் ஒதுங்கி நிற்கும்வரை இந்தக் கொடிய அரக்கனை ஒழித்துவிடமுடியாது.

மக்கள் சமூக ரீதியாக, அமைப்பு ரீதியாக, நிறுவன ரீதியாக இந்த அரக்கனுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து அதனைத் தடுக்க முயற்சித்தாலன்றி இந்த முயற்சியில் வெற்றி கிட்டமாட்டாது.

சமூகத்தை இயக்கத்தக்கவர்கள், வேறு இயக்க வேலைகளில் ஈடுபட்டிருப்பதால் சமூகச் சீரழிவுகள் மலிந்துகொண்டு போகின்றன.

சமூகம் சீரழிகின்றது, சீரழிகின்றது என்று நாம் கூப்பாடு போடுவதால் மட்டும் சமூகச் சீரழிவைத் தடுத்து நிறுத்திவிடமுடியாது.

இது விடயத்தில் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவனும் பொறுப்புணர்ந்து, கசிப்புத் தயாரிப்பு - விற்பனை - பாவனை - பற்றிய தகவல்களை உரிய மட்டத்துக்கு எடுத்துரைத்து அதன் பாவனையைத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.

கொள்ளை, திருட்டு, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவையும் கசிப்புப் பாவனை, எய்ட்ஸ் நோய் பரம்பல் என்ற சமூகச் சீரழிவுப் பாதிப்புகளும் நமது சமூக விழுமியங்களை விழுங்கி ஏப்பம்விட முன்னர் நாம் விழித்துக் கொண்டு செயற்படுவது அவசியமாகும். இதில் தாமதம் செய்வோமானால் - இயக்கத் தக்கவர்கள் வந்த பின் இயக்கலாம் என்று சிந்திப்போமேயானால் - அது 'கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம்' செய்வதாக அமைந்துவிடும்.

# அமெரிக்க மக்களின் துயரங்களை நாமும் பகிர்ந்து கொள்கின்றோம்

## டக்ளஸ் தூதுவருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,செப்.20

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும், அது பிரதிநிதித்துவம் செய்யும் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் செப்ரெம்பர் 11 ஆம் திகதியன்று நியூயோர்க், வாஷிங்ரன் நகரங்களில் இடம்பெற்ற அனர்த்தங்களால் மனம் வருந்தும் அமெரிக்க மக்களுடன் தனது கவலையையும் பகிர்ந்து கொள்கிறது.

இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என்.டக்ளஸ்தேவானந்தா அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸுக்கு ஊடாக அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் என்று ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துக்ககரமான சம்பவங்கள் அண்மையில் கட்டு நாயக்கா விமான நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் துயரங்களை எம்மனதில் மீளவும் நினைவுக்குக் கொண்டுவருகின்றன. சர்வதேச ரீதியில் பயங்கரவாதம் தலைவிரித்தா டுகின்றது. அமெரிக்க அரசின் மீதும் தாக்குதல் தொடுக்குமளவுக்கு பயங்கரவாதிகள் துணிந்துள்ளனர். இத்தகைய 'கிரிமினல்'கள் தண்டனைக்குள்ளாகாமல் தப்பக்கூடாது. உலகெங்கும் உள்ள ஜனநாயகவாதிகளும் அமைதியை விரும்பும் மக்களும் பயங்கரவாதத்தையும் அதன் நிழலையும் எல்லா வகையிலும் தோற்கடிப்பதற்கு முன்னிற்பர்.

அமெரிக்காவில் உறவினர்களை இழந்தவர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு காயமடைந்த மற்றும் பாதிப்புற்ற அனைவரும் வெகுவிரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பப் பிரார்த்திக்கின்றோம். என்பதையும் வெளிப்படுத்துங்கள் - என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க-3)

## நாட்டு நடப்பு

**உண்டி - IX**

சாவதும் ஒருநாள்தானே
 தடுத்திட முடியுமோ? சொல்
ஆவது ஆகட்டுமென்று
 அடிவயிறு நிறைய உண்பாய்
பாவம் உன் உடலைப் பார்க்க
 பரிதாபமாய் இருக்குதெடி
கேவலம் நீ எலும்பாய்ப் போனால்
 கேட்டாலும் வருமோ காதல்?
கோபமேன் கொள்கிறாய் நீ
 கொழுப்பதும் அழகுதானே!

*- விகடகவி.*

# மா விலையை அரசு உயர்த்தியமை உடன்பாட்டை மீறும் செயலாகும்

## ஜே.வி.பி. அதிருப்தி

கொழும்பு,செப்.20

அத்தியாவசியப் பொருள்கள் மீதான விலையை அதிகரிப்பதில்லை என்று தம்முடன் செய்துகொண்ட உடன்பாட்டில் அரசு தெரிவித்திருந்தபோதும் -

மாவின் விலையை அதிகரித்ததன் மூலம் அது மீறப்பட்டுள்ளது என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

மாவின் விலையை கிலோவுக்கு ஒரு ரூபா 60 சதத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகரித்ததை அடுத்து ஜே.வி.பி. அரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இப்படித் தெரிவித்துள்ளது.

தகுதிகாண் அரசு அமைப்பதற்கு ஆதரவு வழங்க எட்டப்பட்ட உடன்பாட்டில், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்த்தப்படமாட்டா என்பதும் அடங்கியுள்ளது. ஆனால் மாவின விலையை அரசு உயர்த்தியுள்ளமை, அந்த உடன்பாட்டை மீறிய செயலாகும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை - இது விடயமாக ஐ.தே.கட்சியும் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான கருணாசேன கொடிததுவககு விடுத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி. தகுதிகாண் அரசு மாவின் விலையை ஒரு ரூபா 60 சதத்தால் அதிகரித்துள்ளது. சில தினங்களுக்கு முன்னா ஒரு ரூபாவால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவு அதிகரிபபால் ஏற்கனவே அவலத்துக்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு இந்த விலை அதிகரிப்பு மேலும் ஓர் அடியாக அமைந்துள்ளது.

தகுதிகாண் அரசின் உடன்படிக்கையின்படி மா, சீனி, 'காஸ்', எரிபொருள் ஆகிய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரிப்பதில்லை எனக் கூறப்பட்டது.

இந்த நிலையில் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடு என்ன ஆனது? - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மாவின் விற்பனை ஆதிக்கத்தைப் பெற்றுள்ள பிறிமா நிர்வாகமே மாவின் விலையை உயர்த்தியுள்ளது என்றும் -

இது விடயமாக அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடி வருவதாகவும் - வர்த்தக அமைச்சர் டிஎம்.ஜயரத்ன தெரிவித்தார்.

(க-3)

# நாட்டின் உயர் பதவிகள், பீடங்களை அலங்கரிப்போர் கலைத்துறையினரே!

## புதுமுக மாணவர்கள் மத்தியில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,செப்.20

நாட்டின் உயர் பதவிகளையும் உயர் பீடங்களையும் தலைமை வகித்து அலங்கரிப்பவர்கள் கலைத்துறையில் பட்டம் பெற்றவர்களே.

அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்துக்கு விசேட அனுமதியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கலைப் பீட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கலைபீடாதிபதி செ.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் அவர் தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் -

இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்கின்ற இளைஞர், யுவதிகள் பல்கலைக்கழகத்திலே கல்விகற்காவிட்டால் அவர்களது வாழ்க்கை நிறைவு பெறாததாகவே அமைகின்றது.

இன்றைய உலகில் கல்வி இல்லாமல் எதுவுமே செய்யமுடியாது. அந்த வகையில் விசேட அனுமதி பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய நீங்கள் அனைவரும் பாக்கியசாலிகளே.

கலைப்பீடத்தை தரக்குறைவான துறை என்றும், கௌரவக் குறைச்சலானதுறை என்றும் சிலர் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் நாட்டின் உயர்பதவிகளையும் உயர் பீடங்களையும் அலங்கரிப்பவர்களில் பெரும்பாலானோர் கலைத்துறையில் கல்வி கற்றவர்களே.

அது மட்டுமன்றி கலைத் துறையைச் சேர்ந்த மாணவர்களில் அதிகமானோர் முதலாவது கல்விப் பரம்பரையினராகவே இருக்கின்றனர். அவர்களது பெற்றோர்கள் அதிகமாகப்படிக்காதவர்களாகவே காணப்படுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருக்கும் நீங்கள் அனைவரும் பல்கலைக்கழக வாழ்நாளிலே உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய வலலமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தேவையற்ற செலவுகளைச் செய்யாது சிக்கனமாக வாழ்வதற்கு பழகிக்கொள்ள வேண்டும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் தமது உரையில் -

இன்று பாடசாலைகளிலும் சரி எமது பல்கலைக்கழகங்களிலும் சரி ஆசிரியர்களை மாணவர்கள் கேள்வி கேட்கும் தன்மை மிகவும் அருகி வருகிறது.

சில இடங்களில் எந்த மாணவன் எந்தக் கேள்வி கேட்பானோ என்று எதிர்பார்த்து ஆசிரியர்கள் வகுப்புக்குள் செல்லும்போது தன்னை மிகவும் தயார்படுத்திக்கொண்டு போவார்கள்.

ஆனால் இங்கு அந்த நிலைமை இல்லை. என்னுடைய பல்கலைக் கழக ஆசிரியர் வரலாற்றில் இதுவரை எந்த மாணவனும் என்னிடம் சந்தேகம் கேட்டதில்லை. இந்த நிலைமாற வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, மொழியிலும் ஆங்கிலமும் துறைத் தலைவர் கலாநிதி திருமதி எஸ்.ரமேஸ், நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா, பொருளியற்றுறை தலைவர் வி.பசிவநாதன், இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் ஆகியோரும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினர்.

(க-4)

## முன்பள்ளி ஆசிரியைகளுக்கு பயிற்சிநெறி

வடமராட்சி,செப்.20

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் வடமராட்சி உப நிலையத்தில் முன்பள்ளி ஆசிரியைகளுக்கான பயிற்சிநெறியின் ஆரம்ப வைபவமும் ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணைப்பாளர் மா.நடராஜசுந்தரம தலைமையில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழக மூதவை உறுப்பினர் சட்டத்தரணி இ.உருத்திரா பிரதம விருந்தினராகக் கலந்து கொளவார்.

(ஐ-173)

## சாகித்தியவிழா போட்டிகள் ஒத்திவைப்பு

வடமராட்சி,செப்.20

வடமராட்சி கிழக்கு கலை பண்பாட்டுப் பேரவையினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவிருந்த சாகித்திய விழாப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

போட்டிகளின் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என வடமராட்சி கிழக்கு கலை பண்பாட்டுப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

(க-182)

### நாளை

புரட்டாதி 05
வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தி
முற்பகல் 9.18 வரை.
நட்சத்திரம் : விசாகம்
வைகறை 5.28 வரை
சுபநேரம் : 6.02 - 7.32
ராகுகாலம் : 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கீழ்ப்படிவுள்ள மனைவி கணவனை ஆளுகிறாள்.


**கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!**



*விளையாட்டுப் பொருள் அல்ல; வினையாகும் பொருள் அது. என்றும் அறியாத பொருள்களை எடுத்து விளையாட முயலாதீர்!*

### மாகாணக் கல்வி அமைச்சுச் செயலரிடம்

# இடமாற்றத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் முறையிடலாம்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.கல்வி வலயத்தில் கடந்த 10ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள 40 ஆசிரியர்களில் பாதிக்கப்பட்டவர்கள் தமது முறைப் பாட்டை மாகாணக் கல்வி அமைச் சுச் செயலாளருக்கு அனுப்பலாம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் சிரேஷ்ட பொதுச் செயலாள த.பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

இந்த இடமாற்றம் தொடர்பாக மாகாணக் கல்வியமைச்சுச் செயலா ளருடன் தொடர்புகொண்டு தாம் பேசிய சமயம் -

வருட ஆரம்பத்தில் பாடசாலை களில் மேலதிகமாக இருந்த ஆசிரி யர்களை இடமாற்றம் செய்யும்படி தாம் வலயக் கல்விப் பணிப்பாள ருக்குப் பணிப்புரை விடுத்ததாகவும்-

இந்த இடமாற்றத்தில் பாதிக்கப் பட்டவர்கள் தமது முறைப்பாட்டை அனுப்பினால், அதை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - செயலாளர் தெரிவித்தார்.

மாகாணச் செயலாளருக்கு முறைப்பாட்டுக் கடிதத்தை அனுப்பி, அதன் பிரதியை சங்கத்திடம் ஒப் படைக்கும்படியும் பஞ்சலிங்கம் சம் பந்தப்பட்ட ஆசிரியர்களைக் கேட் டுள்ளார். (க-3)

## தேச வழமை சட்ட நூல் வெளியீடு

வடமராட்சி,செப்.20

சட்டத்தரணி சபா.ரவீந்திரன் எழு திய "தேச வழமை" சட்ட நூல் வெளி யீட்டு விழா எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா கலந்துகொள்வார். யாழ்.மேலதிக நீதிவான் திருமதி சரோஜினி இளங் கோவன் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார். மல்லாகம் மாவட்ட நீதிபதி க.பா.சுப்பிரமணியம் முதன் மைப் பிரதியைப் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்குவார்.

நூல் ஆய்வுரையை மூத்த சட்டத் தரணி கனகரத்தினம் கேசவன் நிகழ்த்துவார். (ஐ-173)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.பொன்னம்பலம் அருணகிரிநாதன்**

(B.A.(Hons), Dip.Ed., S.L.P.S. - I)

யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அதிபரும், வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவரும், வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சபைத் தலைவரும், வேலணை சிற்பனை முருகமூர்த்தி கோயில் அறங்காவலர் சபை உறுப்பினரும், வேலணை பெரியபுலம் கிராம அபி விருத்திச் சங்கத் தலைவரும், எமது கிராமத்தின் கல்வி, சமய, சமூகப் பணிகளில் முன்னின்று உழைத்து வருபவருமாகிய **திரு.பொ.அருணகிரிநாதன் 01.06.1996ஆம் திகதியிலிருந்து அதிபர் தரம் - I க்குப் பதவி உயர்வு பெற்றுள்ளதையிட்டு** உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரின் சேவை சிறப்படைந்து, சமூகத்துக்கு நற்பணிகள் பல செய்ய எல்லாம் வல்ல விநாயகரினதும் முருகப்பெருமானினதும் கிருபை அவருக்குக் கிட்ட வேண்டுமெனப் பிரார்த் திக்கின்றோம்.

**வேலணை மேற்கு, கிராம அ.ச.,**
**சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை,**
**சிற்பனை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையம்.**

(92466)

# தேசிய போலியோ தடை மருந்து கொடுக்கும் தினங்கள் - 2001

## யாழ்.மாவட்டம்

**போலியோ நோயை முற்றாக இந்நாட்டிலிருந்து ஒழிக்கும் நோக்குடன் கடந்த ஆறு வருடமாக போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டு வருகின்றது. தென்னிலங்கையில் கூடிய முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கீழ்க் குறிப்பிட்ட காரணங்களால் இதில் எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படவில்லை.**

**(01) காலத்துக்குக் காலம் மக்கள் இடம்பெயர்வதால் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து மருந்து கொடுப்பதில் உள்ள சிரமம்.**

**(02) இடம்பெயர்வு காரணமாக மக்கள் குறிப்பிட்ட இடங்களில் நெரிசலாக வாழ்கின்றபடியால் சுகாதாரத்தைப் பேணுவது குறைவாகக் காணப்படுகின்றது.**

**இக் காரணங்களால் வடக்கு - கிழக்கில் இந்நோய் மறைமுகமாக இருக்கலாமென ஐயப்பாடு உண்டு. எனவே இவ்வருடமும் செப்ரெம்பர் 22ஆம் திகதியும், ஒக்ரோபர் 20ஆம் திகதியும் இரு தடவைகள் (05) ஐந்து வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் போலியோ மருந்து கொடுக்க சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.**

**யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கீழ்க் குறிப்பிட்ட நிலையங்களில் போலியோ தடை மருந்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாகாண பிரதிப் பணிப்பாளர் - சுகாதார சேவைகள் - மேற்கொண்டுள்ளார். இந்நிலையங்களில் காலை 8.00 மணிமுதல் மாலை 04.00 மணிவரை தடை மருந்து வழங்கப்படும். 05 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பு பல தடவைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் இம்முறையும் கட்டாயமாக இது கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. நூற்றுக்கு நூறு வீதமான பிள்ளைகளுக்குத் தடை மருந்து கொடுப்பதன் மூலம் இக்கொடிய நோய் எமது பிள்ளைகளுக்கு வராமல் தடுப்பது மட்டுமல்லாது எம் நாட்டிலிருந்தே முற்றாக இந் நோயை ஒழித்து விடவும் முடியும்.**

**சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக சிகிச்சை நிலையங்களின் பெயர்ப் பட்டியல் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

### 01. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, தெல்லிப்பழை

01. ஆரம்ப சுகாதார நிலையம், தாவடி.
02. ம.ம., இணுவில்.
03. இணுவில் மத்திய கல்லூரி.
04. ம.ம., உடுவில்.
05. மல்வம் சேச்.
06. உடுவில் மேற்கு அந்திரான்.
07. இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.
08. ம.ம., சுன்னாகம்.
09. யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
10. ம.ம.ம.ம., அளவெட்டி.
11. ஆ.சு.நிலையம், சங்குவேலி.
12. மல்லாகம் சிகிச்சை நிலையம் (தெல்லிப்பழை).
13. ம.ம., புன்னாலைக்கட்டுவன்.
14. ம.ம., ஏழாலை.
15. மயிலங்காடு சிகிச்சை நிலையம்.
16. ஏழாலை மாதர் சங்கம்.
17. ஏழாலை பிரதேச சபை.
18. வசாவிளான் சிகிச்சை நிலையம்.
19. ஆ.சு.நிலையம், குளமங்கால்.
20. ஆ.சு.நிலையம், ஈவினை.
21. பன்னாலை சிகிச்சை நிலையம்.
22. தாவடி காளி கோயிலடி.
23. இணுவில் கலாஜோதி வாசிகசாலை.
24. கல்லாரை.
25. பன்னாலை.

### 02. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பருத்தித்துறை

01. சோளன்கள் சிகிச்சை நிலையம்.
02. மணியகாரன் தோட்டம் பாடசாலை.
03. ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை.
04. வல்லிபுரக்குறிச்சி கிராம அலுவலர் காரியாலயம்.
05. திக்கம் சிகிச்சை நிலையம்.
06. அல்வாய் பிரதேச சபை பணிமனை.
07. அத்தாய் விநாயகர் பாடசாலை.
08. வியாபாரிமூலை சிகிச்சை நிலையம்.
09. சென்.அன்ரனி சிகிச்சை நிலையம்.
10. மாதனை மாதர் சங்கம்.
11. கற்கோவளம் சிகிச்சை நிலையம்.
12. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்.
13. பருத்தித்துறை மத்திய மருந்தகம்.
14. விக்கினேஸ்வரா சிகிச்சை நிலையம்.
15. வதிரி சிகிச்சை நிலையம்.
16. கப்பூது வாசிகசாலை.
17. கரவெட்டி மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை.
18. இராஜ கிராமம் சிகிச்சை நிலையம்.
19. கிழவித் தோட்டம் வாசிகசாலை.
20. கட்டைவேலி சனசமூக நிலையம்.
21. கோயிற்கடமை சனசமூக நிலையம்.
22. அம்பிகை பாலர் பாடசாலை.
23. உடுப்பிட்டி சனசமூக நிலையம்.
24. பாரதி சனசமூக நிலையம்.
25. இலகடி சனசமூக நிலையம்.
26. இமையாணன் மாதர் சங்கம்.
27. கலைமகள் பாலர் பாடசாலை.
28. உடுப்பிட்டி பிரதேச சபை.
29. மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை.
30. வளர்மதி பாலர் பாடசாலை, தொண்டமனாறு.
31. கொற்றாவத்தை அ.த.க., பாடசாலை.
32. பொலிகண்டி இ.த.க., பாடசாலை.
33. கொற்றாவத்தை அ.மி.த.க., பாடசாலை.
34. வல்வெட்டி இ.த.க., பாடசாலை.
35. அம்பன் அ.ம.த.க., பாடசாலை.
36. மணற்காடு பாலர் பாடசாலை.
37. குடத்தனை சிகிச்சை நிலையம்.
38. பொற்பதி வாசிகசாலை.

### 03. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணம்

01. சிறுவர் பூங்கா பாலர் பாடசாலை.
02. ஈச்சமோட்டை பாலர் பாடசாலை.
03. திருநகர் சனசமூக நிலையம்.
04. குருநகர் சிகிச்சை நிலையம்.
05. ஆ.வே. மாயா பாலர் பாடசாலை.
06. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 1.
07. யூப்ளி மகப்பேற்று நிலையம் - 2.
08. ஆயுர்வேதக் கல்லூரி.
09. போதனா வைத்தியசாலை.
10. கொட்டடி பாலர் பாடசாலை.
11. நாவலர் சிகிச்சை நிலையம்.
12. நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலை.
13. சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கண்டி வீதி.
14. காந்தி சனசமூக நிலையம், அரியாலை.
15. ஞானக்குழந்தை பாலர் பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி.
16. வள்ளுவன் சனசமூக நிலையம், வண்ணார்பண்ணை.
17. அங்கர் பாமசி முன்.
18. கந்தர்மடம் சிகிச்சை நிலையம்.
19. செட்டித்தெரு சனசமூக நிலையம், நல்லூர்.
20. நல்லூர் சிகிச்சை நிலையம்.
21. மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்.
22. வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம்.

### 04. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்

01. சுற்றயல் கூறு, சங்கானை.
02. ஆரம்ப சுகாதார நிலையம், பண்ணாகம்.
03. மத்திய மருந்தகம், தொல்புரம்.
04. ஐக்கிய சங்கப் பாடசாலை, சுழிபுரம்.
05. மத்திய மருந்தகம், வட்டுக்கோட்டை.
06. வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி.
07. கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை.
08. அராலி தெற்கு சரஸ்வதி மகா வித்தியாலயம்.
09. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்.
10. கிராமிய வைத்தியசாலை, பண்டத்தரிப்பு.
11. மத்திய மருந்தகம், இளவாலை.
12. சனசமூக நிலையம், மாசியப்பிட்டி.
13. மானிப்பாய் லயன்ஸ் கழகம்.
14. சனசமூக நிலையம், சுதுமலை.
15. ஆரம்ப சுகாதார நிலையம், சாவற்கட்டு.
16. ஆரம்ப சுகாதார நிலையம், முள்ளி, ஆனைக்கோட்டை.
17. வை.எம்.சி.ஏ.,நவாலி.

### 05. சுகாதார வைத்திய அதிகாரி, சாவகச்சேரி

01. மிருசுவில் வடக்கு பாடசாலை.
02. கச்சாய் பிரதேச சபை.
03. மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
04. கைதடி வடக்கு அம்பிகா மாதர் சங்கம்.
05. கைதடி தெற்கு கமநல நிலையம்.
06. வரணி ம.ம.ம.ம.

### 06. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்

01. இடைக்காடு சிகிச்சை நிலையம்.
02. சுற்றயல்கூறு அச்சுவேலி.
03. மத்திய மருந்தகம் புத்தூர்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், வாதரவத்தை.
05. சிறுப்பிட்டி சிகிச்சை நிலையம்.
06. அச்செழு சிகிச்சை நிலையம்.
07. நீர்வேலி சிகிச்சை நிலையம்.
08. ஊரெழு சிகிச்சை நிலையம்.
09. உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
10. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கோப்பாய்.
11. மாதா கோவிலடி, இருபாலை.
12. கட்டப்பிராய் சிகிச்சா நிலையம்.
13. கல்வியங்காடு சைவப் பாடசாலை.
14. திருநெல்வேலி கலாமன்றம்.
15. மத்திய மருந்தகம், கொக்குவில்.
16. கிராமிய அபிவிருத்திச் சங்கம், கொக்குவில்.
17. மத்திய மருந்தகம் மகப்பேற்று மனை, கோண்டாவில்.
18. சூசையப்பர் கோவிலடி.
19. கிராமசபை, புத்தூர்.
20. ஆரம்ப பாடசாலை சைவத்தமிழ், உரும்பிராய்.
21. செருக்கப்புலம் அன்னங்கை சிகிச்சை நிலையம், கோண்டாவில்

### 07. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை

01. மாவட்ட வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.
02. தம்பசிட்டி சனசமூக நிலையம்.
03. மெலிஞ்சிமுனை சேச்.
04. ஆரம்ப சுகாதார நிலையம், புளியங்கூடல்.
05. ஆரம்ப சுகாதார நிலையம், நாரந்தனை.
06. சுற்றயல்கூறு காரைநகர்.
07. களபூமி கிராம அலுவலர் காரியாலயம்.
08. வாரிவளவு ஆரம்பப் பாடசாலை.
09. சுற்றயல்கூறு அனலைதீவு.
10. ஆரம்ப சுகாதார நிலையம், எழுவைதீவு.
11. கிராமிய வைத்தியசாலை, வேலணை.
12. சாட்டி மாதா சேச்.
13. பராசக்தி வித்தியாலயம்.
14. மண்டைதீவு.
15. மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு.
16. சுற்றயல்கூறு, நயினாதீவு.
17. மாவட்ட வைத்தியசாலை, நெடுந்தீவு.
18. நெடுந்தீவு மேற்கு - நிலையம்.
19. சுப்பிரமணியம் வித்தியாலயம்.

**மாகாண பிரதிப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

(C/18308)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 - 04 - 1927 | 01 - 10 - 2000 |

### அமரர்
### கணபதி குழந்தையன்

திதி:- 20.09.2001

*பாசமுடன் எமைக்காத்து பண்புடனே வாழவைத்து*
*நேசமுடன் நீ வாழ்ந்த காலமது மாறவில்லை,*
*ஆசையுடன் எமை அழைத்து வல்லிபுரத்தான்*
*தாள் வணங்க வாஞ்சையுடன் செல்லுகையில்*
*காலன் அவன் குறிவைத்தான் விதி வசத்தால்*
*ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பாடசாலை வீதி,*
*இமையாணன் கிழக்கு,*
*உடுப்பிட்டி.*

- குடும்பத்தினர்

(92447)

## மட்டுவில் வாசி மிதிவெடியில் சிக்கி காலை இழந்தார்

யாழ்ப்பாணம்,செப்.20

மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் குடும்பஸ்தர் ஒருவர் தனது இடதுகாலை முழங்காலுக்குக் கீழ் இழந்துள்ளார்.

வீட்டுவளவைத் துப்பரவு செய்துகொண்டிருந்த சமயம் மிதிவெடியில் சிக்கிய மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அருளப்பு தவராஜா (வயது 36) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(க-ரி-15)

## இரு கால்களும் எரிந்து சிறுவன் படுகாயம்

யாழ்ப்பாணம்,செப்.20

பந்தை எடுப்பதற்காக ஓடிய சிறுவன் எரிந்து கொண்டிருந்த குப்பைக்குள் தவறுதலாக ஓடியதால் கால் பகுதி எரிந்து காயமடைந்தான்.

யாழ்ப்பாணம் மடத்தடிப் பகுதியில் புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் குருநகர் மடம் வீதியைச் சேர்ந்த தெய்வேந்திரம் சுரேஷ்குமார் (வயது 10) என்ற சிறுவனே எரிகாயத்திற்குள்ளானான்.

காயமடைந்த சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

(க-ரி-15)

உ
குகமயம்

## உடுப்பிட்டி இமையாணன் அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழா

நாளை (21-09-2001) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு 1009 சங்காபிஷேகம்.

| | | | |
|---|---|---|---|
| முற்பகல் | 11.00 | மணிக்கு | விஷேடபூசை. |
| முற்பகல் | 11.30 | மணிக்கு | ஷண்முகார்ச்சனை. |
| நண்பகல் | 12.00 | மணிக்கு | அன்னதானம். |
| மாலை | 4.00 | மணிக்கு | விஷேட பூசை. |
| மாலை | 4.30 | மணிக்கு | திருவூஞ்சல். |
| மாலை | 5.00 | மணிக்கு | கிராம ஊர்வலம். |

*பிரதம குருக்கள்:*

பிரம்மஸ்ரீ தாணு. வாசுதேவக் குருக்கள்
(பிரதமகுரு, கலட்டி எச்சாட்டி மகாமாரியம்மன் கோயில்)

*அடியார்கள் தரிசித்துப் பயன் பெறுக.*

(92416) - ஆலய பரிபாலன சபை

## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 - 01 - 1963 | 13 - 10 - 1999 |

### அமரர் கந்தையா சிவகுமார்

(சிவா)

*அன்புச் செல்வமே! ஆண்டுகள்*
*இரண்டாயினும் ஆறவில்லை ஐயா*
*உன் நினைவுகள்!*
*எங்கு நீ சென்றாலும்*
*அமரத்துள் உள்ளாய் - நீ*
*எமக்குத் தெய்வமாய்!*

*இல.94, பருத்தித்துறை வீதி,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (92418)

பிரிவால் துயருறும்:
பெற்றோர், மனைவி, மகள், சகோதரர்கள்.

## போலியோ
## நோயை முற்றாக ஒழிப்போம்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில்
தேசிய போலியோ தடுப்பு மருந்தேற்றல் இயக்கம்

**2001 செப்ரெம்பர் 22 சனிக்கிழமை**
**2001 ஒக்ரோபர் 20 சனிக்கிழமை**
**இரு தினங்களிலும்**



ஐந்து வயதுக்குட்பட்ட உங்களின் எல்லாப் பிள்ளைகளுக்கும் போலியோ தடுப்பு மருந்தூட்டுங்கள்.
**முன்னர் தடுப்பு மருந்து கொடுத்திருந்தாலும் இம்முறையும் *கட்டாயம்* கொடுங்கள்.**
விவரங்களுக்கு உங்கள் பகுதிக் குடும்ப சுகாதார சேவையாளரை அல்லது சுகாதார சேவை உத்தியோகத்தரை விசாரியுங்கள்!

PolioPlus unicef

(C/18526)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 - 02 - 1932 | 21 - 08 - 2001 |

### அமரர் கந்தையா இராஜேந்திரா

(Rtd.A.O., V.C. Office, Kopay)

(செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச்செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி, தபால், தந்தி மூலமாகவும் ஆறுதல் கூறிய அனைவருக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலித்தவர்களுக்கும் மற்றும் அனுதாபச் செய்திகள் வெளியிட்ட கல்வியங்காடு ஸ்ரீ சத்தியசாயி பாபா பஜனை நிலையத்தினருக்கும் பலவழிகளிலும் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*6, ஹில்டன் பிளேஸ்,*
*பம்பலப்பிட்டிய, கொழும்பு-4.*
**T.P. 585457**

- குடும்பத்தினர்

(92396)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 - 06 - 1924 | 01 - 10 - 2000 |

### அமரர் வேலுப்பிள்ளை இராசா

திதி:-சதுர்த்தி 20.09.2001

என்றும் எங்கள் நினைவில்
நின்று நிறைகின்ற தெய்வமே!
நன்றாய் அம்மன் அருள்வேண்டி
இன்றும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*வரிசப்புலம்,*
*சுன்னாகம்.* (92409)

- மனைவி, மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

யாழ்.வைத்தீஸ்வரா சந்திக்கு அருகில் இல.22A, வெள்ளாந்தெரு என்னும் முகவரியில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட மாடிவீடு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: S.இரத்தினம், இல.201, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P. No. 2113 (92438)

உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அண்மையில் உடுவில் - மானிப்பாய் வீதியில் 4 3/4 பரப்பு காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட விசாலமான புதிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Mrs.R.P.Chelliah, Elephant villa, Uduvil, Chunnakam. (92455)

### காணி விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் டச் வீதியில் கிணற்றுடன பனை, தென்னை, மா, இலுப்பை மரங்களைக் கொண்ட 14 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Mrs.R.P. Chelliah, Elephant villa, Uduvil, Chunnakam. (92454)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

மோட்டார் சைக்கிளில் சென்றவரின் மூக்குக் கண்ணாடி ஒன்று இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்பாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ள பேக்கரியில் பெற்றுக்கொள்ளவும். (92470)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ.350/=) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல.3081. (C/18232)

### தவறிவிட்டது

சாவற்கட்டு, ஆனைக்கோட்டை என்னும் முகவரியுடைய குணரத்தினம் குணசேகரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.720360691V) 21.08.2001 அன்று யாழ்ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (92477)

### திருமண சேவை

எம்மிடம் சகலவிதமான மணமக்களும் உள்ளனர். செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாள்களில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம். கமலக் கண்ணன் திருமண சேவை, இல. 770, நல்லூர், யாழ்ப்பாணம். (92480)

### பரிசளிப்பு விழா

வலி.தெற்கு,செப்.20

ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாசாலை பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் செ.சிவநடராசா தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் பிரதமவிருந்தினராகவும், பதில் மாவட்ட நீதிபதி புலவர் மு.திருநாவுக்கரசு சிறப்புவிருந்தினராகவும், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (க-152)

### பழைய மாணவர் சங்கம் கணனி வழங்கியது

வடமராட்சி, செப்.20

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு பழைய மாணவர் சங்க லண்டன் கிளை நான்கு கணனிகளை வழங்கியுள்ளது.

ஏற்கனவே பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளை ஒரு கணனியை வழங்கியிருந்தது.

இக் கணனிகள் மூலம் இதே கல்லூரியில் கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறிய பழைய மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி நெறிகள் கட்டம் கட்டமாக வழங்கப்படும் என பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் மா.நடராஜசுந்தரம் தெரிவித்தார். (ஐ-173)

---

யா/சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றது

அகில இலங்கை ரீதியாக நடத்தப்பெற்ற எழுத்தாக்கப் போட்டியில் எமது பாடசாலை தரம் 5 மாணவி

**செல்வி மெடோனா ஆன்சியா முத்துக்குமார்**

அவர்கள் தங்கப் பதக்கம் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி மேலும் பல்கலையிலும் சிறப்புற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

- அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள்.

*றக்கா வீதி, யாழ்ப்பாணம்.* (C/18330)

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

01- 04-1948 01- 09-1996



### திருமதி நடராசா மீனாம்பிகை

திதி:- 20.09.2001

**பாசமிகு தாயாய்**
**பாரினில் எம்மை வளர்த்து**
**பல சிறப்புப் பெற்று நாம் வாழ**
**வழி அமைத்தீர்களே அம்மா!**
**ஐந்தாண்டுகள் அல்ல ஐந்நூறு ஆண்டுகள்**
**சென்றாலும் உங்களை மறப்போமா?**
**என்றென்றும் பார்த்திருந்த**
**உங்கள் ஒளி முகத்தைக் காண**
**விழி மூடாமல் காத்திருப்போம்!**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"மீனா இல்லம்" புகையிரத வீதி அருகில், மல்லாகம்.* (92437) - குடும்பத்தினர்

---

## கண்ணீர் அஞ்சலி

திரு.ந.சோமசுந்தரம் (முகாமையாளர்)
(ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்)
அவர்களின் அன்பு மனைவி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 15 |
| 12 | 09 |
| 1940 | 2001 |



### திருமதி சோமசுந்தரம் கோகிலம்

அவர்கள் காலமானதையிட்டு
**எமது ஆறாத்துயர் நல்கி அஞ்சலி செய்கின்றோம்.**

உடல் வெறும் கூடு!
உயிர்பிரிவுற்றது!
உண்மையை உரைத்தான்!
உன்னடி சேர்ந்தாரை
உவப்போடு ஏற்பாய்!!
மெய்யே பொய்!!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம், துன்னாலை வடக்கு, புலோலி.*

**பிரதான சிவாச்சாரியர்கள், உதவிக் குருமார்கள், அறங்காவல் சபையினர், ஊழியர்கள்.** (92424)

---

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி கணபதிப்பிள்ளை சின்னம்மா

**(மாமுனை,செம்பியன்பற்று)**

திருமதி கணபதிப்பிள்ளை சின்னம்மா அவர்கள் 17.09.2001 இல் மினி கோற்றா அமெரிக்காவில் காலமானார். இவர் எமது பாடசாலையின் பழைய மாணவரும் பாடசாலை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவரும் அமெரிக்காவில் வசிப்பவருமான கணபதிப்பிள்ளை இராசலிங்கத்தின் அன்புத் தாயாரும் மற்றும் பழைய மாணவியாக மிளிர்ந்து ஆசிரியையாகவும் கடமையாற்றி அமெரிக்காவில் வசிப்பவருமான திருமதி கிருஸ்ணேஸ்வரி (புனிதா) இராசகோபால் அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது மறைவால் துயருறும் அமெரிக்காவில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் இலங்கையில் வசிக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
***யா/நாகர்கோவில் மகாவித்தியாலயம், நாகர்கோவில்.***

(C-18329)

---

## கொழும்பில் யாழ்.மாணவர்களை மிரட்டினார் தமிழ் அதிகாரி

கொழும்பு,செப்.20

தேசியமட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக கொழும்பு வந்திருந்த யாழ். மாவட்ட மாணவர்கள் கல்வி அமைச்சின் தமிழ் அதிகாரி ஒருவரால் மிக மோசமான முறையில் நடத்தப்பட்டதாக மாணவர்கள் கவலை தெரிவித்தனர்.

கொட்டாஞ்சேனை சென். மேரிஸ் பாடசாலையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களே இந்த நிலைக்கு உள்ளானார்கள்.

தமிழ்ப் பாரம்பரிய உடையான வேட்டி, நஷனல் அணிந்து சென்ற மாணவர்களை அந்த அதிகாரி மிரட்டியுள்ளார்.

'யாழ்ப்பாணத்தில் அணியும் உடைகளெல்லாம் இங்கு சரிவராது. உடையை மாற்றி ரவுஸர், சேட்டுடன் வந்தால்தான் போட்டியில் பங்குபற்ற இடமளிப்பேன்' என்று அந்த அதிகாரி யாழ். மாணவர்களிடம் கூறினாராம்.

செய்வதறியாது திகைத்துப் போன அந்த மாணவர்கள் அங்கு வந்த பிரமுகர் சிலரின் உதவியுடன் போட்டியில் பங்குபற்ற முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

பட்டிமன்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவன் அணிந்திருந்த உருத்திராட்ச மாலையை கழற்றும்படி அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த அதிகாரியின் குளறுபடிகள் காரணமாக யாழ்.மாணவர் திறமையாகச் செய்தும் முதலாமிடத்தைப் பெறமுடியாது போனது என்று அவரின் பெற்றோர் ஆதங்கப்பட்டனர். (க-3)

---

## பகிரங்க அறிவித்தல்

**நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி.**
**வழக்கு இல. 90**

மேற்படி வழக்கில் விளக்கம் முடிவடைந்துள்ளது. இவ் வழக்குடன் சம்பந்தப்பட்ட பின்வரும் சான்றுப் பொருள்கள்

1. மூன்று பெட்டிகளில் 90 அரச சீல் சாராயப் போத்தல்கள்,
2. ஒரு பெட்டியில் 24 லயன் லாகர் பியர் போத்தல்கள்

இம்மன்றில் உள்ளன.

மேற்படி சான்றுப் பொருள்களை எவரும் இதுவரை உரிமை கோராததாலும் உரிமையாளரைக் கண்டறிய முடியாதுள்ளதாலும் இச்சான்றுப் பொருள்கள் மன்றில் தடுத்துப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

எனவே இச்சான்றுப் பொருள்களுக்கு உரிமை கோரக்கூடிய எவரேனும் ஆள் இருப்பின் இப் பகிரங்க அறிவித்தல் கொடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு (6) மாதங்களுக்குள்ளாக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றின் முன் அவரது உரிமைக் கோரிக்கையை முன்வைக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

மன்றின் கட்டளைப்படி:

**வி.வே.கணேசமூர்த்தி,**
*பதில் பதிவாளர், நீதிவான் நீதிமன்று, சாவகச்சேரி.*

திகதி: 20-09-2001 (92313)

---

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 02 | 24 |
| 09 | 09 |
| 1955 | 1998 |



### அமரர் தம்பிஐயா சற்குணானந்தன்

*(மேற்பார்வையாளர், நீர்வேலைப்பகுதி - 1. யாழ்.மாநகர சபை)*

*திதி:- 20-09-2001*

**அன்பொழுகப் பேசி அறிவுப் பசி நீக்கி**
**என்றும் எம் மனத்தே இனிதே வீற்றிருந்து**
**ஆசையுடன் எமை வளர்த்த அப்பாவே!**
**இன்று ஆண்டுகள் மூன்று ஆனதுவோ**
**எமைப் பிரிந்து?**
**குன்றுமோ உங்கள் நினைவுகள் எம் மனதில்?**

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**மனைவி, பிள்ளைகள்.**

*இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.* (92479)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பொதுசன நூலகத்தின் உதவி நூலகர்
திருமதி இராசேஸ்வரி அவர்களின் அன்புக்கணவர்

### இளையதம்பி இராஜநாயகம்

அவர்களின் திடீர் மரணச்செய்தி கேட்டு நாம் அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

யாழ்.பொதுசன நூலகப் பணியாளர்கள்.

(C/18331)

[யாழ். குடாநாட்டு மக்களுக்கு]

# புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்க முடியாத நிலையே உள்ளது

## பலாலி பாதுகாப்புத் தலைமையகம் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைத் தொடர்புக் கோபுரத்தின் மூலம் வழங்கக் கூடிய முழுச்சக்தியின் உதவியுடன் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதும், புதிதாக இணைப்புக்கள் வழங்க முடியாத நிலையே காணப்படுகிறது என்று ரெலிகொம் நிறுவனத்தின் மாகாணப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

— இவ்வேறு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம்விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் மக்கள் தொலைபேசி இணைப்புகளைப் பெற்றுக்கொள்ள ரெலிகொம் நிறுவனத்தில் யாழ். கிளைக்கு ஏராள மானவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். ஆனால் விண்ணப்பித்துள்ளவர்சள் அனைவருக்கும் தொலைபேசி இணைப்புகளைவழங்க யாழ். கிளைக்கு முடியாமை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை தொடர்பாகக் கடந்த 17 ஆம் திகதி யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் கட்டளை அதிகாரி, வடக்கு — கிழக்கு மாகாண ரெலிகொம் நிறுவனத்தின் பிரதான பணிப்பாளருக்கிடையே பலாலி தலைமையகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

தற்போது யாழ். ரெலிகொம் கிளையின் மூலம் பெற்றுக்கொடுக்கக்கூடிய முழுஅளவில் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் புதிதாக இணைப்புகள் வழங்கக்கூடிய சக்தி, தொடர்பு கோபுரத்தில் இல்லை என்றும், இதனாலே சகலருக்கும் சீரான தொலைபேசிச் சேவைகளை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் — விவரிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மக்கள் புதிதாகத் தொலைபேசி இணைப்புகளைப் பெற்றுக்கொள்ள பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், விண்ணப்பித்துள்ளவர்களுக்கு உரிய நேரத்தில் முன்னுரிமை அடிப்படையில் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டமை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

இதேவேளை, இன்னும் சில வாரங்களில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள தொடர்பு சாதன இயந்திரங்களின் உதவியுடன் முழு அளவில் சகலருக்கும் சீரான முறையில் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுக் கொடுக்கமுடியுமென வடக்கு- கிழக்கு மாகாண ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்—என்றுள்ளது.

(க-3)

## யாழ். ரெலிகொம் கோபுரத்தில்

# புதிய கருவி பொருத்தப்பட்டதும் தொலைபேசி சேவை சீராகிவிடும்

## பொது முகாமையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செப். 20

யாழ். ரெலிகொம் நிலையத்தில் அமைக்கப்பட்டு வரும் கோபுரத்தில் பொருத்துவதற்கான 'ரிபீட்டர்' கருவி நவம்பர் மாதம் அளவிலேயே இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னரே தொலைபேசிச்சேவை முழுமையாகச் சீரடையும்.

ரெலிகொம் நிறுவனத்தின் வடக்கு- கிழக்கு மாகாணப் பொது முகாமையாளர் எஸ். கனகசூரியர் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கோபுரத்துக்கும் மன்னாரில் அமைக்கப்பட்டுள்ளகோபுரத்துக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்த 'ரிபீட்டர்' என்ற கருவி இரு கோபுரங்களிலும் பொருத்த வேண்டியது அவசியம்.

மன்னாரில் அமைக்கப்பட்ட கோபுரத்தில் இந்தக்கருவி பொருத்தப்பட்டு விட்டது. இதேபோன்ற கருவி யாழ்ப்பாணத்தில் உள்ள கோபுரத்திலும் பொருத்தப்படவேண்டும்.

இந்தக் கருவியைப் பெறுவதற்கு பிரான்ஸில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் நவம்பர் மாத ஆரம்பத்துக்குமுன்னர்இந்தக் கருவிகள் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கின்றோம்.

அந்தக் கருவி கிடைத்ததும் குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையேயான சேவை முழுமையாகச் சீராகும். கூடுதலான இணைப்புக்களையும் வழங்க முடியும் — இப்படி அவர் கூறினார்.

(க-3)



# சாயி சிந்தனை

## ஆத்மாவுடன் பற்றை வளர்த்துக் கொள்

இறைவனிடம் இருக்கும் உனது உறவினைப் பற்றிய தெளிவு இல்லையெனில், உனது ஆன்மீக சாதனைகள் அனைத்தும் வீண். ஆனால் இந்த ஒற்றுமைத் தத்துவத்தை (இறைவனுடன்) புரிந்து கொண்டு விட்டால், நீ எங்கிருந்தாலும், கடவுளுடன் ஒன்றாயிருக்கிறாய்!

தேகத்தின் மேல் வைக்கும் உறவு வெறும் பௌதிகமான உலகியல் பந்தம் மட்டுமே! அதற்கும் ஆன்மீகத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஒரு வீட்டுத் தலைவனை, அக்குடும்ப அங்கத்தினர்கள் பல வகையில் அழைக்கின்றனர். மகன் — அப்பா என்றும், மருமகள் - மாமா என்றும், பேரன் - தாத்தா என்றும், உடலை வைத்து ஏற்பட்ட உறவினால் அழைக்கின்றனர். தேகத்தின் மேல் கொண்ட பற்றுதலால் மயங்கிப் போய் விடக்கூடாது.

உடல் முழுமையும் அழுக்கும், நோயும் நிரம்பியது. இந்த சம்சாரக் கடலை அதனால் தாண்ட இயலாது.

மனமே! எப்போதும் இவ்வுடல் நிரந்தரம் என நினைக்காதே! இறைவனது பாதங்களில் சரணடைந்துவிடு! உடல் மீது வைக்கும் பற்றினால் பந்தங்களுக்குள் சிக்கிவிடாதே!

ஆத்மாவுடன் பற்றுதலை வளர்த்துக் கொள்! அதற்காக புனிதச் செயல்களான ஸ்வரணம் (இறைவனது புனிதச் சரித்திரங்களைக் கேட்டல்), கீர்த்தனம் (இறைவனது புகழ் பாடுதல்), ஸ்மரணம் (அவரை விடாது நினைவிலிருத்துதல்), பாத சேவனம் (இறைவனது தாமரைப் பாதங்களுக்குச் சேவை செய்தல்), அர்ச்சனம் (வழிபாடு), வந்தனம், தாஸ்யம் (சேவகன்), ஸக்யம் (நட்பு), ஆத்ம நிவேதனம் (முழுமையான சரணாகதி) முதலியவற்றில் ஈடுபாடு.

[சனாதன சாரதி 1998 கார்த்திகை]

# 11 ரூபாவுக்கு பாண் விற்பனை

வடமராட்சி கிழக்கு, செப். 20

கட்டைவேலி – நெல்லியடி ப.நோ. கூ சங்கம் பவனையாளர்களின் நல்லெண்ணத்தினால் பாணைக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றது.

சங்கத்தின் பேக்கரியில் உற்பத்தி செய்யப்படும் பாண் 1 இறாத்தல் 11 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஏனைய இடங்களில் பாண் 12 ரூபாவாக விற்பனையாவது தெரிந்ததே. (க-182)

# அம்பனில் நாளை சிரமதானம்

வடமராட்சி கிழக்கு, செப். 20

'மலேரியா' நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் சிரமதானம் அம்பனில் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தச் சிரமதானப் பணியில் அம்பன் அ. மி. த. க. பாடசாலை மாணவர்கள், அபிவிருத்தித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் ஈடுபடவுள்ளனர்.

அம்பன் பிரதேசச் சுற்றாடல் சுத்தம் செய்யப்படவுள்ளதுடன் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய சிறு குட்டைகள் மண் போட்டு நிரப்பப்படவும் உள்ளன.

(க-182)

# ஆசிரியருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம், வலிகாமம் மற்றும் தீவகம் கல்வி வலயங்களின் பாடசாலைகளில் தரம் 11 இல் இந்து சமய பாடத்தைக் கற்பித்து வருகின்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ம-10-ரி)

# பிறப்பு, இறப்பு சான்றிதழ் பெற சாதாரண விண்ணப்பம் போதும்

## மேலதிகப் பதிவாளர் தகவல்

யாழ். செயலகத்தின் பதிவாளர் காரியாலயத்தில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களைப் பெறவிரும்புவோர் அதற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் ஒன்றில்தான் விண்ணப்பிக்கவேண்டும் என்ற கட்டாயம் எதுவுமில்லை.

8×11 அளவுக்கு குறையாத தாள் ஒன்றில் உரிய விவரங்களை எழுதி விண்ணப்பிக்கலாம் என்றும்—

தரகர்களிடம் வீணாக ஏமாறவேண்டாமென்றும் — மேலதிக மாவட்டப் பதிவாளர் ந. சதாசிவஐயர் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

உரிய அளவுடைய விண்ணப்பத்தாளில் விண்ணப்பதாரியின் பெயர், விலாசம், சான்று தேவைப்படுபவரின் பெயர், தகப்பனின் பெயர், தாயின் கன்னிப் பெயர், பிறந்த இடம், பிறந்த திகதி, பதிவு இலக்கமும், திகதியும் (தெரியுமானால்) ஆகிய விவரங்களையும் —

விவாக விண்ணப்பத்திற்கு விண்ணப்பம் செய்வோர் விண்ணப்பதாரியின் பெயர், விலாசம், மணமகனின் பெயர், மணமகளின் பெயர், பதிவாளர் பெயர், திருமணம் நடந்த இடமும் திகதியும், பதிவாளர் பிரிவு போன்ற விடயங்களை குறிப்பிட்டும் —

விண்ணப்பங்களைத் தயாரித்து உரிய முத்திரைகளை ஒட்டி சுயவிலாசமிடப்பட்ட கடித உறையுடன் சேர்த்து செயலகத்தில் இதற்கென வுள்ள கருமபீடத்தில் சமர்ப்பித்தால், 10 நாள்களுக்குள் அதற்குரிய பதில் அனுப்பி வைக்கப்படும் எனவும் மேலதிக மாவட்டப் பதிவாளர் தெரிவித்தார்.

செயலகத்திற்கு முன்பாக குறிப்பிட்ட விண்ணப்பப் படிவம் பத்து ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-ரி-10)

## அங்கக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு

# பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்ய லயன்ஸ் கழகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம் செப். 20

யாழ். மாவட்டத்தில் அங்கக் குறைபாடுகளுடன் பிறந்திருக்கும் குழந்தைகளுக்கு தமிழ்நாடு, சென்னையிலுள்ள ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மனையில் இலவசமாக பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை செய்யும் வசதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு லயன்ஸ் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

லயன்ஸ் கழகங்களின் பிராந்தியம் 10 இன் தலைவர் லயன் செ. ஞானராசா இத் தகவலைத் தெரிவித்தார்.

சென்னையிலுள்ள மேற்படி ஸ்ரீ இராமச்சந்திரா மருத்துவ மனையில் மேற்கொள்ளப்படும் வசதிகுறைந்தவர்களுக்கான பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைக்குக் கட்டணம் எதுவும் பெறப்படுவதில்லை என்றும்—

அங்கு தங்குமிட வசதிகள் இலவசமாகச் செய்யப்படும் என்றும்— தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிருந்து சென்னைக்குச் செல்லும் போக்குவரத்துச் செலவை மட்டும் சம்பந்தப்பட்டவர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் அங்க குறைபாடுகளுடன் பிறந்த குழந்தைகளின் பெற்றோர்கள் இந்தச்சிகிச்சையைப் பெறவிரும்பின் பிள்ளையின் புகைப்படத்துடன் தமது பகுதியிலுள்ள லயன்ஸ் கழகத்துடன் அல்லது செ. ஞானராசா, பிராந்திய தலைவர், சுதுமலை வடக்கு, மானிப்பாய் என்றமுகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-135)

## மாகாணசபை திணைக்களங்களில்

# மோத சேவையை பூர்த்தி செய்த சிற்றூழியருக்கு நிரந்தர நியமனம்

## வடக்கு-கிழக்குமாகாண ஆளுநர் அனுமதி

யாழ்ப்பாணம், செப். 20

இம்மாதம் முதலாம் திகதி ஆறுமாதகால சேவையைத் தொடர்ச்சியாகப் பூர்த்தி செய்த அமைய, சமயாசமய, தற்காலிக அடிப்படையிலான மாகாணசபைக்கு உட்பட்ட திணைக்கள சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்றையும் அவர் விடுத்துள்ளார்.

இதன்படி நிரந்தர நியமனம் வழங்குவதற்கு வசதியாக — சிற்றூழியரின் நியமனக்கடிதம், பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் மற்றும் திணைக்களத் தலைவரின் சிபார்சுக் கடிதம் ஆகியவற்றை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்கும்படி மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் க. பரமலிங்கம் சகல திணைக்களங்களின் தலைவர்களையும் கேட்டுள்ளார்.

இதேபோன்று —

மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்வி அலுவலகங்கள், கோட்டக்கல்வி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் சிற்றூழியர்கள் தொடர்பான விவரங்களை அனுப்பும்படி வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர் க. பரமேஸ்வரன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

இந்த விவரங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பும்படி அவர் கோரியுள்ளார்.

(க-3-51)

# கடைகளுக்கு முன் சைக்கிள் நிறுத்த படையினர் தடை

சாவகச்சேரி, செப். 20

கொடிகாமம் நகரப் பகுதியில் — வீதியோரங்களில் — வியாபார நிலையங்களுக்கு முன்னால் — சைக்கிள்களை நிறுத்தவேண்டாம் என்று படையினர் அறிவித்து வருகின்றனர்.

வியாபார நிலைய உரிமையாளர்களின் சைக்கிள்களும் வியாபார நிலையத்தின் வாயில் பக்கத்தில் நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

படையினர் பாதுகாப்பை முன்னிட்டு இந் நடைமுறையைக் கடைப்பிடித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-31)

# தகுதியற்ற அமைச்சர்கள் பேசியதாலேயே ஐ.தே.கவுடனான பேச்சுத் தோல்வியுற்றது

## அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே கூறுகின்றார்

கொழும்பு,செப்.20

இணக்கப்பாடு தொடர்பாக ஐ.தே.கவுடன் பேச்சு நடத்த, தகுதியற்ற அமைச்சர்களை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அனுப்பியதாலேயே, அந்தப் பேச்சினால் பயன் ஏதும் கிட்டாமல் போனதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குற்றஞ் சாட்டினார்.

ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்த முன்னர், ஐ.தே.வுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி முயற்சித்து வந்தது.

இந்த முயற்சியின் ஓர் அங்கமாக, அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தலைமையில் மங்கள சமரவீர, நிமால் ஸ்ரீபால டி.சில்வா மற்றும் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, லஷ்மன் கதிர்காமர் ஆகியோர் அடங்கிய குழு ஐ.தே.க. தலைவர்களுடன் இணக்கப்பாடு குறித்து நடத்திய பேச்சு தோல்வி டைந்திருந்தது.

இது தொடர்பாகவே அமைச்சர் ஜெயராஜ் தற்போது குற்றச்சாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

ஐ.தே.கவுடனான பேச்சுக்கு மக்கள் அங்கீகாரம் பெற்றவர்களையே அனுப்பியிருக்க வேண்டும் என்று கூறிய அவர், அத்தகையவர்களின் பெயர்களை வெளியிடவில்லை.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சில நிபந்தனைகளை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் -

நாடாளுமன்ற உறுப்பினருக்கான தனது சம்பளத்தின் 50 சதவீதத்தை ஒப்பந்த நிபந்தனைப்படி பன்முகப் படுத்தப்பட்ட நிதிக்கு வழங்குவதைத் தான் ஒப்புக்கொள்ளவில்லை என்றும -

அதற்குப் பதிலாக அந்தப் பணத்தைத் தனது தொகுதியில் உள்ள வறிய மக்களுக்கு உதவ நேரடியாகப் பயன்படுத்தப் போவதாகவும் - அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி. இணைந்து ஏற்படுத்தும் இடைக்கால அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வேறு மூன்று அமைச்சர்களுடன் சேர்ந்து தனது அமைச்சர்ப் பதவியை இராஜினாமாச் செய்த ஜெயராஜ் 24 மணித்தியாலங்களுக்குள் குத்துக்கரணம் அடித்து இடைக்கால அரசை - தனது தொகுதி மக்களின் விருப்பப்படி நடப்பதாகக் கூறி - ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.



நாவாந்துறைப் பகுதியில் வீடொன்றை முற்றுகையிட்டு தேடுதல் நடத்திய யாழ்.பொலீஸார், அங்கிருந்து கசிப்பு மற்றும் கசிப்புத் தயாரிக்கும் பொருள்களைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

கசிப்பு, கோடா மற்றும் கசிப்புத் தயாரிக்கும் உபகரணங்கள், கசிப்பை சேமித்து வைக்கும் பரல்கள் ஆகியனவே கைப்பற்றப்பட்டன. அப்பொருள்களைப் படத்தில் காணலாம். யாழ்.பொலீஸ் நிலைய சப் - இன்ஸ்பெக்டர் பெர்னாண்டோ தலைமையில் சென்ற பொலீஸ் குழுவே இவற்றைக் கைப்பற்றியது. (ஐ-10) *(படம்: கொனிகா கலர் லாப்)*

## அரசு - ஜே.வி.பி. உடன்படிக்கையின் பின்

# ஐ.தே. கட்சியினர் செய்வதறியாது குழம்பித் தடுமாறுகின்றனர்

## நந்தன குணதிலக்க எம்.பி. கிண்டல்

கொழும்பு,செப்.20

அரசாங்கத்திற்கும், எமக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் மனநோயாளர் ஆஸ்பத்திரியில் குண்டு விழுந்தது போல் ஐ.தே.கட்சியினர் குழம்பிப்போயுள்ளனர்.

இவ்வாறு ஐ.தே.கட்சினர் ஜே.வி.பியினருக்கு எதிராக மேற்கொண்டு வரும் பிரசாரங்கள் சம்பந்தமாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடனான எமது புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் அமைச்சரவை 20 ஆக குறைக்கப்பட்டு, 20,000 உட்பட்ட விவசாயக கடன்கள் ரத்துச் செய்யப்பட்டு, எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் 4 ஆணைக்குழுக்களையும், 17ஆவது அரசமைப்புச் சீர்திருத்தப் பிரேரணையையும் கொண்டு வரவுள்ளதோடு மக்களுக்குப் பல வெற்றிகளை ஜே.வி.பி. பெற்றுக் கொடுத்துள்ளது.

பிரதமர், அமைச்சர்ப் பதவிகள் கேட்டு அரசமைக்க எடுத்த ஐ.தே.கட்சியின் முயற்சி எடுபடவில்லை. இவர்களின் முக்கிய நோக்கம் ஆட்சியைப் பிடிப்பதாகும். இவை கைகூடாது போகவே குழம்பிப்போய் என்ன செய்வதென்று தடுமாறுகின்றனர் - என்றும் அவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


## விற்பனையாளர்கள் தேவை

இருபாலைச் சந்தியிலும் நல்லூரிலும் இயங்கும் மருந்தகங்கள் மற்றும் எழுதுபொருள் விற்பனை நிலையங்களில் பணிபுரியக்கூடிய அனுபவமும் ஆற்றலும்மிக்க விற்பனையாளர்கள் (ஆண்/பெண்) தேவை.

எதிர்வரும் (23.09.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி - 12 மணி வரை தொடர்புகொள்ளவும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

மெடி எயிட்ஸ் கிளினிக்
689, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி, நல்லூர். (92482)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக தோழர் திரு.பொ.யோகரத்தினம் (கிளைமுகாமையாளர்) அவர்களின் அன்புத்தாயார்

திருமதி
பொன்னம்பலம் பரிபூரணம்

அவர்கள் 18-09-2001 இல் இறைவனடி சேர்ந்தமையையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*திருநெல்வேலி.*
(92481)

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
கிளை - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.



## மரண அறிவித்தல்

### நாகராசா பத்தர் குணசேகரன் பத்தர்

யாழ்ப்பாணம், சிறாம்பியடியைச் சேர்ந்த நாகராசா பத்தர் குணசேகரன பத்தர் நேற்று (19.09.2001) புதன்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராசா பத்தர் - திருமதி இராஜாம்பாள் ஆகியோரின் அன்பு மகனும் மீனாம்பிகை, லோகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், வை.பாலகிருஷ்ண பத்தர், வை.நடராஜா பத்தர் ஆகியோரின் மருமகனும், சங்கானை இரவிச்சந்திரன் பத்தரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.09.2001) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து கோம்பையன்மணல் மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*இல.4, யாழ்.வீதி,*
*சிறாம்பியடி,*
*யாழ்ப்பாணம்.* (92483)

தகவல்:
த.இராகவன்
*(சுவிஸ்சோ கட்டிங்)*


## நீண்ட காலமாகச் சிறைகளில் வாடும்

# தமிழ்க் கைதிகளின் நிலை பற்றி ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்குக!

## சந்திரிகாவிடம் சந்திரசேகரன் கோரிக்கை

கொழும்பு,செப்.20

மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் அவசரகால சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகச் சிறைகளில் வாடும் தமிழ்க் கைதிகள் தொடர்பாகவும், அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும் ஆராய உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்தள்ள அவசரக் கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளதாவது:-

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எரிக் ஜேகதாஸன் தனக்கு அனுப்பி வைத்துள்ள இரத்தத்தில் கையொப்பமிட்ட கடிதத்தின் பிரதி ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

18-06-99 இல் தனது சகோதரியின் திருமணத்திற்காக இந்தியா சென்றிருந்த ஜேகதாஸன் நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் படுகொலை தொடர்பாக 07-10-99 இல் சென்னை பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கடுமையான சித்திரவதை செய்யப்பட்டு 13-10-99 இல் இலங்கை சி.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டார். சென்னையில் வைத்து கைது செய்யப்பட்ட இவரை வத்தளையில் வைத்து தாம் கைது செய்ததாக பொலீஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பெரும்பாலான தமிழ் இளைஞர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்ற போதிலும் அவர்களில் பலர் நிரபராதிகளாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் ஆணைக்குழு ஒன்றை நியமித்து இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் போது பல திடுக்கிடும் உண்மைகளை தமிழ்க் கைதிகள் வெளியிடுவதற்கு வாய்ப்புகள் ஏற்படும் - பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எந்த வழியில் பொலீஸாரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை கண்டுபிடிக்கக் கூடியதாக இருக்கும் - என்றுள்ளது. (க-9)

### காயத்ரீ பீடத்தில் மழை வேண்டி மந்திர பாராயணம்

வலி.தெற்கு,செப்.20

மழை பெய்ய வேண்டி இறைவனையும், வருண பகவானையும் பிரார்த்திக்கும் நிகழ்வுகள் அந்தணப் பெரியோர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 17ஆம் திகதி புரட்டாதி மாதப் பிறப்பிலன்று தொடக்கம் இணுவில் காயத்ரீ பீடத்தில் தர்மசாஸ்தா குருகுல அதிர் சிவஸ்ரீ தாமகா தேவக் குருக்கள் தலைமையில் மாலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை "மஹான்னியாச" மந்திர பாராயணம் ஓதப்பெற்று வருகின்றது. (க-152)

### கரணவாயில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,செப்.20

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச கண் சிகிச்சையும் பொது மருத்துவ சிகிச்சையும் கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

மூக்குக் கண்ணாடி நிபுணர் எஸ்.எம். பெர்னாண்டோ குழுவினர் கண் சிகிச்சையையும் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் லயன் எஸ். கதிரவேற்பிள்ளையுடன் பல்கலைக்கழக இறுதியாண்டு மருத்துவபீட மாணவர்களும் பொது மருத்துவ சிகிச்சையையும் அளிக்கவுள்ளனர்.

இதேவேளை கண் பரிசோதனையில் இனங்காணப்படுபவர்களுக்கு அன்றைய தினமே மூக்குக் கண்ணாடி வழங்கப்படும் என்று வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (க-ரி)

### செங்குந்தாவுக்கு இரு மாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம்,செப்.20

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் செங்குந்த இந்துக் கல்லூரியில் புதிய இருமாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

ஐந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இம்மாடிக் கட்டடத்திற்கான நிதிஒதுக்கீட்டில் முற்பணமாக 2 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது. இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் அடிக்கல்லை நட்டு வைத்தார் என்று ஈபிடிபி. விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 1946 - 12 - 16

மறைவு 2001 - 08 - 21

### திருமதி பாலசுந்தரம் இராசமணி

திதி: 20-09-2001

*பாசத்துடன் வழிகாட்டிய எம்*
*கலங்கரை விளக்கே! - இன்று*
*அலைகடல் நடுவே தனித்தனி*
*படகுகளாய் தத்தளிக்கின்றோம் - நாம்*
*எங்கள் இதயத்தில் நிலைத்து நிற்கும்*
*அன்புத் தெய்வமே!*

*உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.*

இன்று (20-09-2001) வியாழக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் தயவுசெய்து இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நிகழ்வுகளில் தவறாது பங்குபற்றும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*41/2, யமுனாரி ஒழுங்கை,*
*செம்மணி வீதி,*
*நல்லூர்.* (92484)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உளம் மகிழ
# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. மு.அனந்தேஸ்வரன் (B.Ed.(Hons)**

அவர்கள் கடந்த 01.06.1996 முதல் அதிபர் தரம் I க்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை நாம் உளம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல உயர்வுகள் பெற்றுச் சிறப்புற வேண்டுமென மகிழ்ச்சியுடன் இறைவனை வேண்டுகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,
*யா/கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.* (92490)


# திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் இன்று யாழ். திரும்புகின்றனர்

யாழ்ப்பாணம்,செப்.20

பல்வேறு கலை நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக கடந்த மாத மத்தியில் தென்பகுதிக்குச் சென்ற திருமறைக் கலாமன்ற கலைக் குழுவினர் 32 பேர் தமது கலைப் பயணத்தை முடித்துக் கொண்டு இன்று யாழ்ப்பாணம் வந்துசேரவுள்ளனர்.

இவர்கள் கொழும்பு, கண்டி, திருகோணமலை ஆகிய இடங்களில் கடந்த ஒருமாதகாலமாக நடனம், நாடகம், இசை நாடகம், மௌன நாடகம் ஆகிய கலை நிகழ்வுகளில் பங்கு கொண்டனர்.

அத்துடன் கடந்த 15ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொண்ட 'அசோகா' என்ற மௌன நாடகத்திலும் நடித்து சிறந்த பாராட்டுக்களைப் பெற்றுள்ளனர்.

இந்த நாடகத்தில் இவர்களுடன் சிங்கள, முஸ்லிம் கலைஞர்களும் இணைந்து நடித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

## திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம்,செப்.20

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயக தேவஸ்தானத்தில் கடந்த 17 ஆம் திகதி முதல் மீண்டும் பன்னிரு திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. அடுத்த வருடம் மாசி மாதம் வரை இது தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ம-4)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய
ஆசிரியை
**செல்வி ஜெயராணி நாகலிங்கம்**
அவர்கள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுகத்துவமாணிப் பட்டப்பரீட்சையில் சித்தி பெற்றமையையிட்டு
அவரை உளமகிழ்ந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியை
திருமதி க.சுலோஜனா,
திரு.சி.மகேஷ் (வத்தளை).

*சேச் றோட்,*
*சங்கானை.* (92483)



நிர்வாக சபைத் தெரிவும் பொதுக்கூட்டமும்
## யாழ்.மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
## சுன்னாகம் கிளை - 02

சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, அளவெட்டி, மாகியப்பிட்டி, கந்தரோடை, மயிலங்காடு, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களிலுள்ள சிகை அலங்கரிப்பாளர்கள் தங்கள் கடைகளை முழுமையாக மூடி கூட்டத்துக்கு சமுகம் தந்து எமக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*இடம்:-* சித்திவிநாயகர் கல்வி நிலையம்
K.K.S. வீதி, மல்லாகம்.
(பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக)

*காலம்:-* நாளை (21.09.2001) வெள்ளிக்கிழமை
காலை 10.30 மணிக்கு (புதிய நேரம்)

தகவல்:
N.லோகேஸ்வரன்
முன்னாள் செயலாளர்.

(C/18336)



**ராஜா** யாழ்ப்பாணம்
அர்ஜுன், சோனாலி
*மற்றும் பலர் நடிப்பில்*
**கண்ணோடு காண்பதெல்லாம்**
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2. 5 (புதிய நேரம்)
(C/18274)

**நாகம்ஸ்** சுன்னாகம்
*ரஜனி, குஷ்பூ, விஜயசாந்தி*
நடிப்பில்
**மன்னன்**
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
நாளைமுதல்
**முதல்வன்**
(92485)



# முயற்சி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் விருத்தி மையம்

## இளைஞர்களுக்கான தொழிற்றிறன் விருத்திப் பயிற்சிகள் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.




TRRO நிறுவனம் 1977ஆம் ஆண்டில் இருந்து பேரிடரினால் அவதியுறும் மக்களின் துயர் துடைப்பதற்காக வடபகுதியில் இயங்கிவரும் ஒரு அரசசார்பற்ற நிறுவனமாகும் (NGO).

இந்நிறுவனம் உயர் கல்வியைத் தொடரமுடியாத இளைஞர்களின் எதிர்கால நன்மைகருதி 1994 ஆம் ஆண்டில் இருந்து தொழிற்றிறன் விருத்திப் பயிற்சிகளை முயற்சி திறன் விருத்தி மையத்தினூடாக நடத்தி வருகின்றது.

தற்போது இடம்பெயர்ந்தோரின் வேண்டுகோளுக்கிணங்க உரும்பிராயில் புதிய பயிற்சிகளை ஆரம்பிக்க எண்ணியுள்ளோம். இப்பயிற்சிநெறிகளில் பங்குபற்றி பயன்பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறிகள் | தகைமைகள் |
|---|---|
| 1. ரீ.வி., றேடியோ திருத்தல் (பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) | G.C.E. சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் |
| 2. வயரிங் | G.C.E. சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் |
| 3. தையல் இயந்திரம் திருத்துதல் (பெண்களுக்கு மட்டும்) | G.C.E. சாதாரண தர கற்கையினை பூர்த்தி செய்தவர்கள் |
| 4. ஆடைகள் தைத்தல் (பெண்கள் மட்டும்) | G.C.E. சாதாரண தர கற்கையினை பூர்த்தி செய்தவர்கள் |
| 5. புத்தகம் கட்டுதல் (ஆண்/பெண்) | G.C.E. சாதாரண தர கற்கையினை பூர்த்தி செய்தவர்கள் |
| 6. தமிழ் தட்டச்சு (ஆண்/பெண்) | G.C.E.(O/L) தமிழ் C யுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தோர். |
| 7. ஆங்கில தட்டச்சு (ஆண்/பெண்) | G.C.E.(O/L) ஆங்கிலம் C யுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தோர். |
| 8. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து (ஆண்/பெண்) | G.C.E.(O/L) தமிழ் C யுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தோர். |

**பயிற்சிநெறிகளுக்கு பயிற்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.**

*பயிற்சிகள் நடைபெறும் இடங்கள்:*

1) 106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் - *03 தொடக்கம் 08 வரையான பயிற்சி நெறிகள் இங்கு நடைபெறும்.*
2) உரும்பிராய் சந்தி - *01, 02, 03 ஆகிய பயிற்சிநெறிகள் இங்கு நடைபெறும்.*
3) மானிப்பாய் றோட், உரும்பிராய் - *04 தொடக்கம் 08 வரையான பயிற்சி நெறிகள் இங்கு நடைபெறும்.*

பயிற்சிநெறி ஆரம்பம் - ஒக்ரோபர் மாதம்
விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

விண்ணப்பங்கள் முடிவு திகதி - 30.09.2001

அ.நல்லதம்பி,
தலைவர்.

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
104, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(C/18335)



## கல்வியங்காடு - ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டுக்கழகம் (G.P.S) நடத்தும்
## மாபெரும் மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டி

7 பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டியை எமது கழகம் நடத்த உள்ளது. இச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியின் போது பெறுமதி வாய்ந்த சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

- தொடர் ஆட்டநாயகன்
- ஆட்டநாயகன்
- சிறந்த துடுப்பாட்டவீரன்
- சிறந்த பந்துவீச்சாளன்
- சிறந்த களத்தடுப்பாளன்

❖ *விண்ணப்பப் படிவங்கள் பெறும் இடங்கள்:-*

| | |
|---|---|
| எழில் குன்றா அழகிய தங்க நகைகளுக்கு **தயா நகைப் பூங்கா** *213 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.* | பாடல் ஒலிப்பதிவில் தனித்துவம் வாய்ந்தவர்கள் **ஸ்ரீ விநாயகர் வீடியோ சென்ரர்** *பலாலி வீதி, திருநெல்வேலி.* |

✻ விண்ணப்ப முடிவு திகதி:- 27.09.2001
G.P.S, விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு. (92488)


# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் சின்னத்துரை

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கச்சேரி - நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் சின்னத்துரை நேற்று (19.09.2001) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2001) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.296, கச்சேரி - நல்லூர் வீதியில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

தகவல்:
சி.சிவஞானம்,
திருமதி P.பஞ்சலிங்கம்.

(92495)

## தவராசா சுசிலாதேவி

வில்லூன்றிப் பிள்ளையார் கோயில், சோளபுரம், கொட்டடியைச் சேர்ந்த தவராசா சுசிலாதேவி 17.09.2001 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தவராசாவின் அன்பு மனைவியும் சுபாகரன், ஜெயாகரன், மதிமுகராசா, விஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி சுபாகரன் சுபாசினியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை, இன்று (20-09-2001) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வில்லூன்றிப் பிள்ளையார்கோயிலடி,*
*சோளபுரம்,*
*கொட்டடி.*

தகவல்-
பிள்ளைகள்



'ஸ்ரீலங்கா பெஸ்ட்' அமைப்பு விடுத்திருந்த அழைப்பை ஏற்று யாழ்.நகரில் வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக நேற்று நண்பகல் மனித சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களைப் படங்களில் காணலாம். (படங்கள்:- கொனிகா கலர் லாப்)

### பட்டப்பகலிலும் நிலைத்து நின்று

# நீண்டநேரம் போரிடும் ஆற்றலை கடற்புலிகள் பெற்றுள்ளனர்

## தளபதி சூசை உரை

வவுனியா,செப்.20

பட்டப்பகலிலும் நேருக்கு நேர் நின்று நீண்ட நேரம் போரிடும் ஆற்றலைக் கடற்புலிகள் பெற்றுள்ளனர். பருத்தித்துறைக் கடற்பகுதியில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதல் இதனையே எடுத்துக் காட்டுகிறது.

- இவ்வாறு கடற்புலிகளுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் கடற்புலிகளின் தளபதி சூசை.

பருத்தித்துறைக் கடற்பகுதியில் வைத்து கடந்த ஞாயிறன்று துருப்புக் காவிக் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது மரணமான கடற்புலிகளின் துணைத்தளபதி இரும்பொறை மாஸ்டரின் பூதவுடல் உட்பட ஆறு கடற்புலிகளின் பூதவுடல்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு மாவீரர் மயானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கடற்புலிகளின் தளபதி மேற்கண்டவாறு கூறினார்.

கடற்புலிகளின் வளர்ச்சி பற்றி தமிழீழ மக்கள் அனைவரும் நன்கு அறிவர். இந்த வளர்ச்சிக்கெல்லாம் அர்ப்பணிப்புள்ள மக்களே காரணம். 50 கடல்மைல் தூரம் சென்று போரிடும் ஆற்றலைக் கடற்புலிகள் பெற்றுள்ளனர்.

கடற்புலிகளின் துணைத் தளபதி இரும்பொறை மாஸ்டர் மற்றும் சக உறுப்பினர்களின் மறைவு மிகப் பெரிய இழப்புத்தான். ஆனால் எந்த விதமான இழப்புக்களையும் கண்டு புலிகள் அஞ்சியதே கிடையாது. மரணித்த இந்தப் போராளிகளின் வழியில் போராட்டம் தொடரும்.

நமது நாடு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது. எனவே கடலிலே எமது பலத்தை நிலை நாட்டும் போதே தமிழீழத்தை மிகவும் இலகுவாக, விரைவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

- இவ்வாறு கடற்புலிகளின் தளபதி மேலும் தெரிவித்ததாக "புலிகளின் குரல்" வானொலி நேற்றிரவு கூறியது. (ம-7)

### சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்பாக

# குழந்தையைத் தரக் கோரி அட்டகாசம் புரியும் நபர்

யாழ்ப்பாணம்,செப்.20

கடந்த சில நாள்களாக நல்லூரில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியம் அலுவலகத்துக்குச் செல்லும் நபரொருவர் தனது குழந்தையைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரி கற்களையும் தடிகளையும் வீசி அட்டகாசம் புரிந்து வருவதாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மூன்று மாதங்களுக்கு முன்னர் திருநெல்வேலிப் பகுதியில் தாயினால் கழுத்து நெரித்துக் கொல்வதற்கு முயற்சி செய்யப்பட்ட சமயம் அயலவர்களால் மீட்கப்பட்டதாகக் கூறப்படும் குழந்தை ஒன்று யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜாவின் உத்தரவின் பேரில் அந்தக் குழந்தை யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றில் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாக அந்தக் குழந்தை தன்னுடையது என்று கூறிக் கொள்ளும் நபரொருவர் அதனைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கூறி தினமும் நல்லூரிலுள்ள சிறுவர் பாதுகாப்பு நிலையத்துக்குச் சென்று அட்டகாசம் புரிந்து வருவதாகவும் கூறப்படுகிறது. (ம-4)

### மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகக் கொழும்பு இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஆனால் -

பெரும் வர்த்தகப் புள்ளிகள் மற்றும் இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் சனத் ஜெயசூரிய, ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க போன்ற புகழ்பெற்ற பிரமுகர்கள் இந்த மனித சங்கிலிப் போராட்டத்தை ஆதரித்திருக்கின்றனர். (உ)


நன்றியும் வாழ்த்துக்களும்

நேற்று (19.09.2001) புதன்கிழமை தனது 10 ஆவது ஆண்டு நிறைவைக் கண்ட யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினை வித்திட்டு உருவாக்கி அதன் வளர்ச்சிக்காக அயராது முயற்சியுடன் உழைத்தவரான முன்னாள் தலைவர்

உயர்திரு.த.சிவசுப்பிரமணியம்

(லீலா பேக்கரி)

அவர்களுக்கும் அவருடன் ஒத்தாசையாக நின்றுழைத்த நிர்வாக உறுப்பினர்களுக்கும் மற்றும் சக அங்கத்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளையும் மனங்கனிந்த வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

-தென்மராட்சி பேக்கரி உரிமையாளர்கள்.

(92486)


### அஷ்ரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடப்பிட்டிய, டி.பி.எஸ். குணசேகர ஆகியோர் இந்த உத்தரவை வழங்கியுள்ளனர்.

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியும் தேர்தல் காலத்தில் இணைந்தே தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கின. இவ்விரண்டு கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்ததன் மூலம் தேசிய ஐக்கிய முன்னணி உருவானது.

அந்தந்தக் கட்சியைச் சேர்ந்தோர் அந்தந்தக் கட்சியில் உறுப்பினர்களாக இருந்தபடியே தேசிய ஐக்கிய முன்னணியில் உழைத்தனர்.

எனவே தேர்தல் சமயம் இந்தக் கூட்டணியில் செயற்பட்ட சேகு தாவூத் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரே தவிர தேசிய ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் அல்லர்.

"எனவே தனது உறுப்பினர் அல்லாத ஒருவரை தனது கட்சியிலிருந்தோ எம்.பி. பதவியிலிருந்தோ வெளியேற்றும் அதிகாரம் பேரியல் அஷ்ரப்புக்கு இல்லை" -

இப்படி சேகு தாவூத் சார்பில் வாதிடப்பட்டது. (உ)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் கைகோர்த்தவாறு வீதிகளில் நின்றனர்.

பகல் 11.55 மணி முதல் 12.10 மணி வரை இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

வாகனங்களில் அழைத்து வரப்பட்ட மக்கள், யாழ்.முற்றவெளியில் இறக்கிவிடப்பட்டு அங்கிருந்து கைகோர்த்தவாறு கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி வழியாக ஆரியகுளம் சந்தி வரை வீதி நெடுகிலும் நின்றிருந்தனர். நகரப் பகுதியின் சில பாடசாலை மாணவர்களும் இதில் இணைந்திருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு ஈ.பி.டி.பி. அமைப்பினரும் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ம-4-10-15-51-117-139-173)


BRIGHTMAN

பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.

A/L 2001

PAPER CLASS

வௌதிகம் → ஜெயசீலன்

இரசாயனம் → எட்வேட்

உயிரியல் → ஞானேந்திரன்

இணைந்தகணிதம் → ஐங்கரன்

(92473)

ஆரம்பம்: 22.09.2001 Sat.7.00 a.m.


### வடமராட்சி

# மீனவர்களின் பிரச்சினை குறித்து அமைச்சருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.20

கடந்த 18 தினங்களாக மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் எமது குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

- இவ்வாறு வடமராட்சி மீனவர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனான சந்திப்பில் தெரிவித்ததாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமராட்சிப் பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள், இராணுவ, கடற்படை, விமானப் படை அதிகாரிகள், யாழ்.அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள் கலந்து கொண்ட கலந்துரையாடல் நேற்றுக் காலை அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:-

கடந்த மாதம் 12 ஆம் திகதியன்று அமைச்சர் முன்னிலையில் இணக்கம் காணப்பட்ட விடயங்களுக்கு இசைவாகவே நாங்கள் நடந்து கொணடோம்.

எனினும் கடந்த 31 ஆம் திகதி முதல் திக்கம் முதல் தொண்டைமானாறு வரையிலான கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த பதினெட்டுத் தினங்களாகத் தொழிலுக்குச் செல்லாமையால் எமது குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளன எனத் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த படைத்தரப்பினர் -

படையினர் எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பாக மீனவர்களுக்கு ஏற்கனவே நன்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அசம்பாவிதங்கள் நிகழாமல் தடுப்பதற்காகவே பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. அமைச்சர் முன்னிலையில் இணக்கம் காணப்பட்ட விடயங்களோடு மீனவர்கள் ஒத்துழைத்தால் மீன்பிடிப்பதில கட்டுப்பாடுகளைத் தளர்த்த ஆயத்தமாகவே இருக்கின்றோம். ஆனால் மீனவர்கள் கடலுக்குள் நீண்ட தூரம் செல்வதனால் பாதுகாப்புக்குக் குந்தகமான நிலையை ஏற்படுத்துகின்றனர் - என்றனர்.

இந்த விடயத்தில் தலையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போது மீன்பிடித்தடை விதிக்கப்படுவதற்கு முன்பிருந்த நிலைமையை மீளக்கொண்டு வருவது தொடர்பாகக் கொழும்பிலுள்ள உயரதிகாரிகளுடன் பேசி முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்தார். அதேவேளை தொழிலில்லாமல் பாதிக்கப்பட்டிருப்போருக்கு பொருத்தமான நிவாரணம் கிடைக்க ஏற்பாடுகள் செய்வதாகவும் உறுதி அழித்தார். - என்றுள்ளது. (ம)

### 9 இலங்கையர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை ஏற்றி வந்தமைக்காக இலங்கையர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பது ஆஸ்திரேலியாவில் இதுவே முதற்றடவையாகும்.

தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு சட்டவிரோதக் குடியேற்றவாசிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆஸ்திரேலிய அரசு தயாராகி விட்டது என்பதையே காட்டுகிறது என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ம-7)

### சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதேசமயம் இந்தப் போராட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் - விழிப்புணர்வுப் பிரசாரம் என்ற பெயரில் - சிஹல உறுமயக் கட்சியினர் கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அங்கிருந்து கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு அவர்கள் ஊர்வலமாகச் சென்றனர். அப்போதே வழியில் மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்களோடு அவர்கள் மோதலில் ஈடுபட்டனர்.

பல இடங்களில் மனித சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்டோரை மிரட்டிக் கலைத்த சிஹல உறுமயவினர், சில இடங்களில் தாக்குதல்கள் நடத்தியதாகவும் கூறப்படுகின்றது. மனித சங்கிலிப் போராட்டத்தில் பங்குபற்றிய - வங்கி ஒன்றில் பணிபுரியும் - பெண் ஊழியர் ஒருவர் நையப்புடைக்கப்பட்டார்.

பொலீஸார் தலையிட்டு மோதல் விஸ்வரூபம் எடுக்காமல் தடுத்தனர்.

சில இடங்களில் சிஹல உறுமய ஊர்வலத்தில் சென்றோர் - இரு தரப்பினரும் எதிரெதிராகச் சந்தித்த போது ஏற்பட்ட குழப்பத்தில் - தங்கள் உறுப்பினர்களையே தாங்கள் அடையாளம் தெரியாமல் தாக்கிக்கொண்டதாகவும் கூறப்பட்டது. (உ-7)

### சமாதானத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்துக்கு எதிராக அக்கட்சி கொழும்பில் நடத்திய ஊர்வலத்தின் முடிவில், அமெரிக்கத் தூதரகத்திடம் அக்கட்சியின் சார்பில் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டது.

சிஹல உறுமயவின் செயலாளர் திலக் கருணாரட்ன ஒப்பமிட்டுள்ள இக் கடிதத்தில் பயங்கரவாதிகளான புலிகளை அழிக்கும் நடவடிக்கையிலும் அமெரிக்கா இணையவேண்டும் என்று கோரப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

### நாளையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றி முடிக்க வசதியாக -

தடுப்பு மருந்து முதற்கட்டமாக வழங்கும் செப்ரெம்பர் 22ஆம் திகதியன்றும் அதற்கு முந்திய நாளிலும்-

இரண்டாம் கட்டமாக வழங்கும் ஒக்ரோபர் 20ஆம் திகதியன்றும் அதற்கு முதல் நாளிலும் -

யுத்தநிறுத்தம் செய்து அமைதி பேணுவதாக இக்கடிதத்தில் தலைவர் வே.பிரபாகரன் உறுதியளித்திருக்கின்றார்.

இத்தினங்களில் அரசாங்கமும யுத்தநிறுத்தம் பேணும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த பல வருடங்களாகப் போலியோ தடுப்பு மருந்து இரண்டு கட்டங்களில் வழங்கப்படும்போது மொத்தம் நான்கு நாள்கள் யுத்த நிறுத்தம் செய்து, அமைதி பேணி, இப்பணி தடையேதுமின்றி நிறைவேறப் புலிகள் ஒத்துழைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்திரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.